வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 04.04.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 116 | பக்கங்கள் : 16

## பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் கலைக்கப்பட்டது!



கொழும்பு, ஏப். 04

பல்கலைக்கழக மாணவர்கள் மீதான அடக்குமுறைகளை கண்டித்து அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் நேற்று கொழும்பு - லிப்டன் சுற்று வட்டத்தில் முன்னெடுத்த ஆர்ப் 15

## கருநாட்டுக்கேணி தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றம் அமைக்க முயற்சி!

முல்லைத்தீவு, ஏப். 04

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் ஒன்றான கருநாட்டுக்கேணியிலுள்ள தமிழ் மக்களின் காணிகளை அபகரித்துச் சிங்களக் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கருநாட்டுக்கேணிப் பகுதியில் பொலிஸ் நிலையத்தைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய காணிகளே, இவ்வாறு அபகரிக்கப்பட்டு 15



# ‘13’ஐ செயல்படுத்துவதில் திறமையற்றுள்ள இந்தியா!

## இந்திய சட்டத்தரணி புழல் காந்தி சுட்டிக்காட்டு



புதுடில்லி, ஏப்ரல் 04

**13ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தாவிட்டால், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை செயல் படுத்துவதில் இந்தியா திறமையற்றது என்ற எண்ணம் நிச்சயம் உருவாகும் என இந்திய சட்டத்தரணியும் செய்தியாளருமான புழல் காந்தி சுட்டிக்காட்டியுள்ளார்.**

இந்திய இணையத்தளம் ஒன்றுக்கு எழுதிய அரசியல் பத்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்தியா பிராந்திய வல்லரசு என்ற கூற்றையும் அது மறைக்கக்கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதாக உடன்படிக்கை மூலம் 15

## 1000 ரூபா விலை குறையும் லிட்ரோ சமையல் எரிவாயு

கொழும்பு, ஏப். 04

லிட்ரோ வீட்டு சமையல் எரிவாயு விலை, இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்படவுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

விலை சூத்திரத்துக்கமைய, இந்த விலைக் குறைப்பு மேற்கொள்ளப் படவுள்ளதாக அவர் கூறினார்.

இதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு கொள்கலனின் விலை சுமார் ஆயிரம் ரூபாயால் குறைக்கப்படுமென லிட்ரோ நிறுவனத் தலைவர் குறிப்பிட்டார்.

தற்போது, 12.5 கிலோகிராம் லிட்ரோ எரிவாயுவின் விலை 4,743 ரூபாயாக உள்ளது. (அ)

## ஐக்கிய மக்கள் சக்தியினர் தாய்வீடு திரும்பவேண்டும்

### நவீன் திஸாநாயக்க அழைப்பு



கொழும்பு, ஏப். 04

”ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிர்காலம் கிடையாது. எனவே, அக்கட்சியில் உள்ளவர்கள் மீண்டும் தாய்வீடு திரும்ப வேண்டும்.” - என்று ஐ.தே.க. உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

”ஐக்கிய மக்கள் 15

## அமைச்சு பதவிக்காக நான் அலையமாட்டேன்

### கூறுகிறார் எஸ்.பி.

கொழும்பு, ஏப். 04

“நான் பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்தவன். எனவே, அமைச்சுப் பதவி கேட்டு அலைய வேண்டியதில்லை.” - என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்தார்.

பெரமுன கட்சி தலைமையகத்தில் 15



சட்டவிரோத மீன்பிடியை தடை செய்யுமாறு வலியுறுத்தி பருத்தித்துறை வீதி, பருத்தித்துறை பிரதேச செயலகம் என்பவற்றை முடக்கி நேற்று போராட்டத்தில் ஈடுபட்டவேளை...! (விரிவான செய்திகள் பக்கம் 7இல்)

## இராணுவ அதிகாரி கொலை:

## இராணுவ கோப்ரலுக்கு 10 வருட கடூழிய சிறை!

கொழும்பு, ஏப். 04

இராணுவ கனிஷ்ட உயர் அதிகாரி ஒருவரை கொலை செய்த இராணுவ கோப்ரல் ஒருவருக்கு 10 வருட கால கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

10 வருட கடூழிய சிறைத் 15

## உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவின் சட்டமூலம் ஜூன் மாதத்துக்குள் சபைக்கு!

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு



கொழும்பு, ஏப். 04

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்த எதிர்பார்ப்பதாகவும் அதன் பின்னர் ஒப்பந்தத்தின் முக்கிய விடயங்கள் சட்டமாக கொண்டு வரப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 15

## வசந்தவுக்கு சந்தர்ப்பம்!

கொழும்பு, ஏப். 04

கொழும்பு - லிப்டன் சுற்றுவட்டப் பகுதியில் எதிர்ப்பில் ஈடுபட்ட அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் சிலருக்கு பல்கலைக்கழக 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள்சுதந்திரமானவை**

# நிவாரணங்களில் அரசியல்வாதிகளின் பங்களிப்பை உடனடியாக நிறுத்துங்கள்

## பிரதமருக்கு பவ்ரல் அமைப்பு கடிதம்

கொழும்பு, ஏப். 04

பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத் திட்டங்களில் வேட்பாளர்கள் பங்குபற்றுவது தேர்தல் சட்டத்தை மீறும் செயல்பாடாகும். எனவே, இவ்வேலைத் திட்டங்களை அரச அலுவலர கள் ஊடாக முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நிவாரண திட்டங்கள் அரசியல் ஆதாயம் தேடும் தந்திரமாகப் பயன்படுத்தப்படுகிறதா என்ற சந்தேகம் சமூகத்தில் எழுந்தால், இந்த நல்லெண்ண பணிக்கு பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்க முடியாது என்றும் பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டி யுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பால் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் தொடர்ந்தும் தடங்கல்கள் ஏற்பட்டு வருகின்ற போதிலும் , இன்னும் உத்தியோகபூர்வமாக தேர்தல் ஒத்திவைக்கப்பட வில்லை. எனவே எந்த நேரத்திலும் தேர்தல் இடம்பெற வாய்ப்புள்ளது.

மேலும், அரசின் பல்வேறு நிவாரணத் திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டு வரு கின்றன. நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இந்த சந்தர்ப்பத்தில், வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு நிவார ணம் வழங்கும் வகையில் செயல்படுவதை பாராட்டுகிறோம்.

ஆனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நிவாரணம் வழங் கும் வேலைத்திட்டங்களில் பங்கேற்கக்கூடாது. இவ்வாறு வினியோகிக்கப்படும் நிவாரணங்கள் அரச நிதி அல்லது பிற நிறுவனங்கள் என்பவற்றின் ஊடாகவே வழங்கப்படுகின்றன.

அவ்வாறிருக்கையில், அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்க இத்தகைய ஆதரவைப் பயன்படுத்துவது நெறிமுறையற்றது. அத்துடன், தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அரசியல் பிரதிநிதிகள் அல்லது வேட்பாளர்கள் உதவி வழங்கும் நடவடிக்கையில் பங்க ளிப்பது தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும்.

மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு நிவார ணம் அளிக்கும் வகையில் அரசு செயல்படுத்தி வரும் இத்திட்டம் அரசியல் ஆதாயம் தேடும் தந்திரமாகப் பயன்படுத்தப்படு கிறதா என்ற சந்தேகம் சமூகத்தில் எழுந்தால், இந்த நல்லெண்ண பணிக்கு பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

எனவே, இனிவரும் நிவாரணப் பணிகளில் அரசியல்வாதிகளின் பங்கேற்பைத் தடுக்கவும், அனைத்து நிவாரணப் பணிகளை யும் அரச அலுவலர்களின் தலையீட்டில் மேற்கொள்ள உரிய நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என் றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஐ)

# புதிய பயங்கரவாத சட்டத்தை முற்போக்கு கூட்டணி ஆதரிக்காது!

கொழும்பு, ஏப். 04

புதிய பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு தமிழ் முற் போக்கு கூட்டணி ஒரு போதும் ஆதரவு வழங்காது என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும்

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை பகுதி யில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர் வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. எனவே, பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும். நாட்டில் தற்போது அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்து

வருகிறது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளனர்.” - என்றார். (ஐ)

# நாமல் ராஜபக்ஷவின் வர்த்தமானி ‘அவுட்’!

கொழும்பு, ஏப். 04

இலங்கை றக்பி நிறுவனத்தின் செயற்பாடுகளை ரத்துச் செய்து முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜ பக்ஷவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெறுவதற்கு தற்போதைய விளையாட்டுத் துறை அமைச்சர் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

குறித்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி இலங்கை றக்பி நிறுவனம் மற்றும் அதன் தலைவர் ரிஸ்லி இல்லியாஸ் ஆகிய தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனு நேற்று அழைக்கப்பட்ட போது பிரதி மன்றாடியார் நாயகம் சுமிதி தர்மவர்தன இதனைக் குறிப்பிட்டார். இந்த நிலையில், குறித்த மனு தொடர்பில் மேற் கொள்ளப்படும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் அறிவிப் பதற்காக எதிர்வரும் 6ஆம் திகதி மீள அழைக்கப்படவுள்ளது. (அ)

# எதிர்க்கட்சிகளுக்குள் குழப்பங்களை ஏற்படுத்துவே அரசின் பணியாகியுள்ளது



சுகொழும்பு, ஏப். 04

சர்வதேச நாணய நிதியத்துக்கு சென்றுள்ளமையால் எமது வெளிநாட்டு கடன் 53 சதவீதத்திலிருந்து 55 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. இது பட்டாசு கொளுத்தி கொண்டாட வேண்டிய விடயமல்ல. இவ்வாறான பிரச்னைகளிலிருந்து நாட்டை மீட்பதை விடுத்து அரசாங்கம் கட்சிகளுக்குள் குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

திங்கட்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கம் அதன் தோல்வியை மறைப்பதற்காகவே எம்மில் பலர் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாகக் கூறுகின்றனர். அவ்வாறு ஒருபோதும் இடம்பெறப் போவதில்லை.

அரசாங்கத்தின் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால், அரசாங்கத்துடன் ஒருபோதும் இணையமாட்டோம். அரசாங்கத்திலுள்ள பலர் வெகுவிரைவில் எம்முடன் இணைவர்.

ஒருபுறம் இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கம் மறுபுறம் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தி மக்களின் குரலை முடக்குவதற்கு முற்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என எவற்றையுமே நடத்துவதற்கு இடமளிக்காத வகையிலேயே இந்த சட்ட மூலத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது. பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் சந்தேகநபரொருவரை தடுத்து வைக்க வேண்டுமெனில் பாதுகாப்பு செயலாளர் மற்றும் நீதிமன்றத்திடம் அனுமதி பெற வேண்டும். ஆனால் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் அவ்வாறு எந்த ஏற்பாடுகளும் இல்லை.

சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றுள்ளமையால் எமது வெளிநாட்டு கடன் 53 சதவீதத்திலிருந்து 55 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

இது பட்டாசு கொளுத்தி கொண்டாட வேண்டிய விடயமல்ல. கடந்த 3 மாதங்களுக்குள் சுமார் 2 இலட்சம் கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் மாத்திரம் 700 வைத்தியர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர். இவ்வாறு நாட்டு பிரஜைகள் வெளியேறுவதை முதலில் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை விடுத்து கட்சிகளுக்குள் குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பதை நிறுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# தமிழ் - சிங்கள புதுவருட சுபநேர பத்திரம் ஜனாதிபதி ரணிலிடம்!



கொழும்பு, ஏப். 04

தமிழ், சிங்கள புத்தாண்டு சுபநேரப் பத்திரம் பாரம்பரிய மற்றும் சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதி பணிமனையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

பாரம்பரிய முறைப்படி மேளதாளத்துடன் கொண்டுவரப்பட்ட சுபநேரப் பத்திரத்தை, புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தார்.

வளர்பிறை தரிசனம், பழைய ஆண்டுக்கான நீராடல், புத்தாண்டுப் பிறப்பு, புண்ணியகாலம், உணவு சமைத்தல், சுப காரியங்களை ஆரம்பித்தல் கைவிசேடம் பெறுதல், உணவு உண்ணுதல், தலைக்கு மருத்துநீர் வைத்தல், தொழிலுக்காக புறப்படுதல், மரம் நடுதல் போன்ற சுப நேரங்கள் இதில் அடங்கும்.

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, மேலதிக செயலாளர் திலக் நந்தன ஹெட்டியாரச்சி, பணிப்பாளர் (ஊக்குவிப்பு) கலாநிதி பிரசாத் ரணசிங்க, கலாசார அலுவல்கள் பணிப்பாளர் பாக்யா சி. கட்டுதெனிய உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

# புலம்பெயர் தமிழர்களின் உதவிகளை கோரும் புகலிடக் கோரிக்கையாளர்கள்

லண்டன், ஏப். 04

பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தியப் பெருங்கடல் தீவான டியாகோ கார்சியாவில் தங்கியுள்ள இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள், புலம்பெயர் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.

சுமார் 68 புகலிடக் கோரிக்கையாளர்கள் அங்கு சென்று 18 மாதங்கள் கடந்துள்ள நிலையில் தங்களை அங்கிருந்து மூன்றாம் தரப்பு நாடுகளுக்காவது அனுப்புமாறு கோருகின்றனர்.

குறித்த தீவில் இதுவரை 68 தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 9 பெண்களும், 47 ஆண்களும், 17 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

அவர்கள் கனடா நோக்கிச் சென்றபோது அவர்களது படகு சேதமடைந்த நிலையில் பிரித்தானிய மற்றும் அமெரிக்க இராணுவத் தளம் அமைந்துள்ள டியாகோ கார்சியாவில் தஞ்சமடைந்தனர்.

சில வாரங்களில் அவர்களை அங்கிருந்து அனுப்புவதாக தீவின் அதிகாரிகள் அறிவித்திருந்த போதிலும் அவர்களில் 68 பேர் 18 மாதங்களாக அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள பலர் தங்களது உயிரை மாய்த்துக்கொள்ள முயல்கின்ற சம்பவங்கள் தொடர்பிலும் வெளிப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், அங்குள்ள மேலும் 4 தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்களது உயிரை மாய்த்துக்கொள்ள முற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

ஈழநாடு
Eelanadu
04.04.2023 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், பங்குனி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் இரு முனை வியூகம்?

ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து நகர்கின்றார். இரு முனை வியூகங்களில் அவர் ஈடுபடுகிறார் என்று தெரிகின்றது. ஒன்று, உள்நாட்டுக்குள் தனக்கான ஆதரவுத் தரப்புகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றார். அடுத்ததாக, இலங்கைத் தீவின் உள்விவகாரங்களில் கரிசனையுள்ள வெளித் தரப்புகளுடன் உறவுகளை பலப்படுத்தி வருகின்றார். இவ்வாறானதொரு பின்புலத்தில் தான், ரணில் விரைவில் புதுடில்லி பயணமாகவுள்ளார். இது தொடர்பில் முன்னைய தலையங்கங்களிலும் நாம் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். ரணிலின் புதுடில்லி பயணத்தின்போது, அவர் நிச்சயம் 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தை முன்வைப்பார். ரணில் விக்கிரமசிங்க ஒரு சாணக்கிய அரசியல்வாதி.

அவர் இந்தியாவின் ஆர்வங்களை நன்கறிவார். அதேவேளை, இலங்கைத் தீவின் மனித உரிமைகள் விவகாரத்தில் அழுத்தங்களை பிரயோகித்துவரும் அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் எல்லையையும் நன்கறிவார். அமெரிக்கா தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் நேரடியாக தலையீடு செய்யப் போவதில்லை. அமெரிக்காவின் ஈடுபாடு உலகளாவிய செல்வாக்கு தொடர்பானது. இலங்கையில் எவ்வாறானதோர் அரசியல் கட்டமைப்பு மாற்றம் ஏற்பட வேண்டுமென்று அமெரிக்கா வற்புறுத்தப் போவதில்லை. அதே வேளை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் ஒரேயொரு நாடான இந்தியாவின் எல்லையென்பது இந்திய - இலங்கை ஒப்பந்தம் மட்டுமே! இந்த அடிப்படையில்தான் இந்தியா தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அழுத்தி வருகின்றது. இந்தியா 13இற்கு அப்பால் பேசவேண்டுமென்பது தமிழர் தரப்புக்களின் ஆசையாக இருந்தாலும் அது நடைமுறைக்கு சாத்தியமான ஒன்றல்ல.

இந்த விடயங்கள் அனைத்தையும் ரணில் நன்கறிவார். அதேவேளை புதிய அரசியல் யாப்பு விடயமொன்றில் ஈடுபட்டு விரல்களை சுட்டுக்கொண்ட அனுபவத்தையும் ரணில் கொண்டிருக்கின்றார். ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில், அரசாங்கத்தின் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் புதிய அரசியல் யாப்பு விடயமும் ஒன்று. இன்னும் சில காரணிகளுமுண்டு. இந்த விடயங்களைத் துல்லியமாகக் கணித்தே தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தை, ரணில் அரசியல் அரங்குக்கு கொண்டுவந்தார்.

13ஆவது திருத்தம் தொடர்பில் பேசினால் - அது தென்னிலங்கையில் எவ்வாறான அதிர்வலைகளை ஏற்படுத்துமென்று தெரிந்தே ரணில் அதனை உச்சரித்தார். எதிர்பார்த்தவாறே, பௌத்த பிக்குகள் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரதியை எரித்து, தங்களின் எதிர்ப்புகளை வெளிப்படுத்தியிருந்தனர். அரசமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தையே அமுல்படுத்துவதில் பெரும் சவால்கள் இருக்கின்றபோது, அதனைத் தாண்டி எவ்வாறு பயணிப்பது - என்னும் கேள்வியுடன்தான் இந்திய மற்றும் அனைத்துலக சமூகத்தை ரணில் எதிர்கொள்ளுவார். இலங்கைத் தீவில் அமைதியை இந்தியா விரும்புகின்றது.

சில விடயங்களை கடுமையாக அழுத்தினால் அமைதி சீர்குலையுமென்று கருதினால் அனைவருமே அமைதியாகி விடுவர். இந்த நிலையில் தமிழர் விவகாரம் இரண்டாம் பட்சமானதொரு விடயமாகிவிடும். ஏனெனில், தமிழர்களால் இலங்கையின் சமநிலையை குலைக்க முடியாது. அதற்கான வலு தமிழர்களிடமில்லை. இந்த நிலையில், சிங்களவர்களை அதிகம் குழப்பமடையச் செய்யும் நடவடிக்கைகளில் வெளித் தரப்புக்கள் எச்சரிக்கையுடனேயே இருக்கும். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அரசியலமைப்பில் இருக்கின்ற ஏற்பாடுகளை அமுல்படுத்துவதன் மூலம் பிரச்னைகளை தீர்ப்பதற்கான பொறிமுறையொன்று தொடர்பிலேயே ரணில் கவனம் செலுத்துவார்.

இந்த விடயத்தில் தமிழரின் எதிர்ப்பு ஒரு பொருட்டாக வெளித் தரப்புகளால் கருத்தில் கொள்ளப்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. ஏனெனில், தமிழர்களின் அரசியல் என்பதே வெளித்தரப்புக்களை நம்பித்தான் இருக்கின்றது. வெளித்தரப்புக்களை அதிகம் விரோதித்துக் கொண்டால், அதனாலும் தமிழர்களே பாதிக்கப்படுவர். தமிழ் அரசியல் தலைமைகள் என்போர் அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரண தேவிக் கதைகளை விடுத்து, யதார்த்தமான பாதையொன்றின் ஊடாகவே பயணம் செய்ய வேண்டும்.

# அத்தியாவசிய பொருட்கள் 10வீதம் விலை குறைந்தது!

*கொழும்பு, ஏப். 04*

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளது. இதனால், அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட இறக்குமதியாகும் பொருட்களின் விலைகள் 10 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது என்று அத்தியாவசிய இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாட்களிலும், தொடர்ந்தும் விலை குறைவடையும் என அந்த சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எந்த பொருட்களிலும், தட்டுப்பாடு இதுவரை ஏற்படவில்லை எனவும் பண்டிகைக்காலத்தில் அனைத்து பொருட்களும், தட்டுப்பாடின்றி சந்தைக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# நாவலர் மண்டப விவகாரம் முன்னாள் முதல்வர் வழக்கு!

*யாழ்ப்பாணம், ஏப். 04*

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையிடமிருந்து பறித்து மத்திய அரசாங்கத்திடம் வழங்கும் வடக்கு ஆளுநரின் முடிவை எதிர்த்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா, யாழ். மாநகர சபை ஆணையாளர் த. ஜெயசீலன், யாழ் மாநகர சபை ஆகிய தரப்புகள் எதிராளிகளாக குறிப்பிப்பட்டுள்ளனர்.

(ஐ)

# விசேட கலந்துரையாடல்

*யாழ்ப்பாணம், ஏப். 04*

இலங்கையின் அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் தொழில்சங்கங்கள் எதிர்கொள்ளும் சவால்களும் என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் வரும் நாளை புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெற வுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் விசேடகருத்துரையை சட்டத்தரணியும் சமூக செயல்பாட்டாளருமான சுவஸ்திகா அருலிங்கம் ஆற்றவுள்ளார். தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுக்கின்றனர். (ஐ)

## கூரிய ஆயுதத்தால் குத்தி ஒருவர் கொலை

*கொழும்பு, ஏப். 04*

உயிரிழந்தவர் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளருடன் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொல்லப்பட்டார்.

கம்பஹா - மினுவாங்கொடை பொலிஸ் பிரிவின் -பட்டதுவன பிரதேசத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மினுவாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## விவசாய அமைச்சர் பொய் கூறுகின்றார்

**தேசிய விவசாய சங்கம்**

*கொழும்பு, ஏப். 04*


விவசாய அமைச்சர் இம்முறை நெல் பயிர் செய்கை தொடர்பில் பொய் கூறுவதாகவும், பொய்யான அறிக்கைகளை வழங்கி ஜனாதிபதியை தவறாக வழிநடத்துகிறார் என்றும் தேசிய விவசாய சங்கத்தின் தலைவர் அநுராத தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இந்த வருட அறுவடை 40 வீதத்தால் குறைந்துள்ளது. 3.3 மில்லியன் மெற்றிக்தொன் அறுவடை என அமைச்சர் மகிந்த அமரவீர பொய் கூறுகிறார்.

இந்த எண்ணிக்கை எங்கிருந்து கிடைத்தது? அறுவடை காலம் முடிந்து ஒரு வாரமே ஆகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஏப்ரல் - 04 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 21
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள்.

**இடபம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடிசலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**மிதுனம்**
சவால்களில் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். சொத்துப் பிரச்சினைக்கு சுமூக தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். புது ஏஜென்சி எடுப்பீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தாமதம் ஏற்படும். நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டாம். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**கன்னி**
கணவன் மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. திடீர் பயணங்கள் செலவுக ளால் திணறுவீர்கள். பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**விருட்சிகம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உங்களை தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர்கள் சிலரின் மனசு மாறும். புதிய முயற்சிகள் கைகூடும். உத்தியோகத்தில் கை ஓங்கும்.

**தனுசு**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். நவீன ரக மின்னணு மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சாதாரணமாகப் பேசப் போய் சண்டையில் முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**கும்பம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சந்தை ரகசியங்களை தெரிந்துகொள்வீர்கள். வாய்ப்புகள் தேடி வரும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். அதிசயிக் கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

# அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி; தேசிய தலைமை எடுப்பதே முடிவு!

சேலம், ஏப். 04

கூட்டணி தொடர்பான முடிவை பா. ஜ. க. தேசியத் தலைமையே எடுக்கும். மாநிலத் தலைமை அல்ல என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சேலத்தில் நேற்று திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர், "கூட்டணி பற்றி பிரதமர் மோடி, பா. ஜ. க. மூத்த தலைவர் அமித் ஷா மற்றும் பா. ஜ. க. தலைவர் ஜே.பி.நட்டாவுடன் பேச்சு நடத்தி வருகிறோம்.



தமிழ்நாட்டில் உள்ள மாநிலத் தலைவர்களால் அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி குறித்து முடிவு எடுக்க முடியாது. அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி பற்றி முடிவு செய்ய வேண்டியவர்கள் டில்லியில் உள்ள தலைவர்கள்தான். டில்லியில் உள்ள தலைவர்கள் அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி தொடரும் என ஏற்கனவே சொல்லிவிட்டனர்" என்றார்.

அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி குறித்த பழனிசாமியின் கருத்து அடிக்கடி அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி பற்றிய சர்ச்சை கருத்துகளை முன்வைத்துவரும் அண்ணாமலைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

(ஐ)

# பா. ஜ. க. - அ. தி. மு. க. கூட்டணி தொடர்கிறது என்றே கூறப்பட்டது

## அண்ணாமலை பூடகப் பேச்சு

சென்னை, ஏப். 04

பா. ஜ. க. - அ. தி. மு. க கூட்டணி என்பது கல்லில் எழுதப்பட்டது கிடையாது என்று பா. ஜ. கவின் மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

அத்துடன், அ. தி. மு. க. கூட்டணியில் பா. ஜ. க. தொடர்கிறது என மத்திய அமைச்சர் அமித்ஷா சொன்ன கருத்துகளை முழுமையாகப் புரிந்துகொள்ள ஹிந்தி தெரிந்திருக்க வேண்டும் - என்றும் சென்னையில் நடந்த நிகழ்வு ஒன்றில் அண்ணாமலை தெரிவித்தார்.

மேலும், கூட்டணி என்பது பா. ஜ. க. தேசிய தலைமைதான் முடிவு செய்யும். அது எப்படி இருந்தாலும், அதில் பா. ஜ. கவின் வளர்ச்சி இருக்க வேண்டும் என்பதில் மாநில தலைவராக நான் தெளிவாக இருக்கிறேன்.

அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணியில் இல்லை என்று நான் எப்போதும் கூறியது கிடையாது. இன்றைக்கும் அ. தி. மு. கவுடன் தான் கூட்டணியில் இருக்கிறோம்.

மேலும், பா. ஜ. க. தனித்து போட்டியிடும் என்றும் நான் பொதுவெளியில் ஒருபோதும் கூறியது கிடையாது. அமித்ஷாவுடனான சந்திப்பின்போது, கூட்டணி குறித்து நான் என்ன கூறினேனோ, அதைத்தான் அமித்ஷாவும் தெரிவித்தார். தேர்தலுக்கு இன்னும் 9 மாதங்கள் உள்ளன. கூட்டணிக்கான இடங்கள் தேர்வு, அதில் எத்தனை இடங்கள் பா. ஜ. கவுக்கு அ. தி. மு. க. வழங்கும், பா. ஜ. கவுக்கும் அ. தி. மு. கவுக்கும் இடையேயான கொள்கை, பா. ஜ. க. எங்கே போட்டியிட வேண்டும், எந்த தொகுதி பா. ஜ. கவுக்கு ஒதுக்க வேண்டும் உள்ளிட்ட பல விஷயங்கள் உள்ளது. இதைப் பொறுத்துதான் கூட்டணி அமையும். எனவே, அமித் ஷா கூறிய பொருளை புரிந்து கொள்ள வேண்டும்.

பா. ஜ. க. - அ. தி. மு. க கூட்டணி என்பது கல்லில் எழுதப்பட்டது கிடையாது. அதனால், கூட்டணி தொடர்பாக மாநில



தலைவராக என்னுடைய கருத்தை கூறியிருக்கிறேன். நான் பணம் இல்லாத 'தூய்மையான அரசியல்' பயணத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறேன். இது 2024ஆம் ஆண்டு மக்களவை தேர்தலில் எதிரொலிக்க வேண்டும் என்பது எனது கருத்து. கட்சி வலிமையாக இருக்க வேண்டும் என்ற இலக்கை நோக்கி சென்று கொண்டிருக்கிறேன். இதேபோல், 25 தொகுதிகளில் பா. ஜ. க. வெற்றி பெறுமளவுக்கு வேட்பாளர்கள் இருக்க வேண்டும். மக்களுக்கு அந்த நம்பிக்கை இருக்க வேண்டும் என நான் கருதுகிறேன் - என்றும் கூறினார்.

# ராகுலுக்கு ஏற்பட்ட சம்பவம் நீதித்துறைக்கான சவால்!

## முன்னாள் அமைச்சர் சிதம்பரம்



சென்னை, ஏப். 04

ராகுல் காந்திக்கு ஏற்பட்ட சம்பவம் நீதித்துறைக்கு விடப்பட்ட மிகப்பெரிய சவால் என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர், "தனியார் நிறுவனம் குறித்து ஆதாரங்களுடன் குற்றம்சாட்டி, ராகுல் காந்தி பேசியதை சபைக்குறிப்பில் இருந்து சபாநாயகர் நீக்கியுள்ளார். 1 மாத காலத்திற்குள்ளாக இந்தியாவின் எந்த நீதிமன்றத்தில் எந்த குற்ற வழக்குக்கு உடனடி தீர்ப்பு வந்துள்ளது? பதவி நீக்க உத்தரவு, யார் கையெழுத்திட்டு அமலுக்கு வந்தது?

163 ஆண்டுகளில் இதுவரை இல்லாத வகையில் வாய்மொழி அவதூறுக்கு, 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டது இதுவே முதல்முறை. இன்று ராகுல் காந்திக்கு நேர்ந்தது வேறு எந்த தலைவருக்கும் நாளை நேரலாம். இது சம்பந்தமாக குடியரசு தலைவரை சந்திப்பதில் எந்த பிரயோஜனமும் இல்லை. நீதிபதிகள்தான் முடிவெடுக்க வேண்டும்.

பிரதமர் மோடியின் கல்வித் தகுதி குறித்து ஏற்கனவே பா. ஜ க. தெளிவாக கூறியுள்ளது.

அதனை கேட்டதே தவறு என்று குஜராத் அபராதம் விதித்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் காழ்ப்புணர்ச்சி குறித்த போலியான வழக்குகளை நீதிபதிகள் தெரிந்து கொள்ள வேண்டும். ராகுல் காந்திக்கு ஏற்பட்ட சம்பவம் நீதித்துறைக்கு விடப்பட்ட மிகப்பெரிய சவால் - என்றார்.

# கிளிநொச்சி வைத்தியசாலையில் முக்கிய பல மருந்துகள் தட்டுப்பாடு

## நோயாளர்கள் பெரும் அவதி

கிளிநொச்சி, ஏப். 04

**கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 02 இலட்சம் பேர் வரையான மக்களுக்கு சேவைகளை வழங்குகின்ற வைத்தியசாலையான கிளி நொச்சி மாவட்ட வைத்தியசாலையில் முக்கியமான சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.**

வைத்தியசாலை வட்டாரங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

குறிப்பாக சிறுநீரக நோயாளிகளுக்கான மருந்துகள் மற்றும் கர்ப்பவதிகளுக்கான முக்கியமான மருந்துகள் என்பன வைத்தியசாலையில் இல்லாத நிலை காணப்படுகிறது.

மாவட்ட வைத்தியசாலையில் மாதாந்த சிகிச்சை பெற்று வரும் நீரிழிவு நோயாளிகள் மற்றும் கர்ப்பவதிகளுக்கு குறித்த மருந்துகளை வெளியிடங்களில் பெற்றுக்கொள்ளுமாறு சிட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் பெரும் பொருளாதார சுமைகளுக்கு முகம் கொடுக்கும் நோயாளர்கள் வெளியிடங்களில் பணத்துக்கு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் காணப்படுவதாகவும் அறிய முடிகின்றது.

எனவே தற்போதைய தகவல்களின் படி இவ்வாறு 23 இற்கும் மேற்பட்ட மருந்துகள் இல்லாதுள்ளதாக கூறப்படுகின்றது. (அ)

# கொழும்பை அண்டிய பகுதிகளிலும் நில அதிர்வு அளவீட்டுக் கருவிகள் பொருத்தப்படவேண்டும்

## நிபுணர்கள் கோரிக்கை

கொழும்பு, ஏப். 04

பேருவளை கடற்பரப்பில் அண்மையில் ஏற்பட்ட நில அதிர்வினால், கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நில அதிர்வு அளவீட்டுக் கருவிகள் பொருத்தப்படவேண்டியதன் அவசியத்தை புலனாய்வு நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொழும்பை அண்மித்த பகுதிகளில் இருந்து மேலதிக தரவுகள் பெறப்பட வேண்டியிருப்பதால், குறித்த பகுதிகளில் நில அதிர்வு அளவீட்டு கருவிகளை நிறுவவேண்டும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்தார்.

தற்போது பல்லேகல, மஹாகந்தராவ, புத்தங்கல மற்றும் ஹக்மன ஆகிய இடங்களில் நில அதிர்வு அளவீடுகள் நிறுவப்பட்டுள்ளன.

அத்துடன், புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் அண்மையில் விக்டோரியா அணைக்கட்டு பகுதியில் பல நிலஅதிர்வு அளவீட்டு கருவிகளை நிறுவ நடவடிக்கை எடுத்தது.

எனினும், இத்தகைய நில அதிர்வு அளவிகள் நாட்டின் மேற்குப் பகுதியில் நிறுவப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில், நாட்டின் பிரதான வர்த்தகத் தலைநகரான கொழும்பு உட்பட நாட்டைச் சூழவுள்ள பிரதேசங்களிலிருந்து நில அதிர்வு தொடர்பான தரவுகளைப் பெற்றுக்கொள்வதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென பேராசிரியர் அதுல சேனாரத்ன சுட்டிக்காட்டினார். (அ)

# களை கொல்லிகள், பூச்சி கொல்லிகளின் விலை குறைக்க நிறுவனங்கள் இணக்கம்

கொழும்பு, ஏப். 04

அனைத்து களைகொல்லிகள் மற்றும் பூச்சிகொல்லிகளின் விலையை 20 வீதத்தால் குறைப்பதற்கும், குறிப்பிட்ட சில பூச்சிகொல்லிகளின் விலையில் 40 சதவீதம் வரை சலுகைகளை வழங்குவதற்கும் நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் பூச்சிகொல்லி மற்றும் களைகொல்லிகளின் விலைகளை குறைப்பதற்கு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவின் பரிந்துரையின் பேரில் விவசாய அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

உலக சந்தையில் பூச்சிகொல்லி மற்றும் களைகொல்லிகளின் விலை குறைப்பு, டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமை மற்றும் இறக்குமதித் தேவைகளுக்காக அரசாங்கம் டொலர்களை விடுவித்தமையினால் விலைகளை குறைக்க முடியும் என அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

நாட்டுக்குள் கடத்தப்படும் பூச்சிகொல்லிகள் மீதான சோதனைகளை விரைவுபடுத்தவும், அதற்கு கடற்படையின் ஆதரவைப் பெறவும் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தரமற்ற பூச்சிகொல்லிகளை விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவதை தடை செய்யுமாறும், பூச்சிகொல்லி சட்டத்தின் கீழ் வழங்கக்கூடிய தண்டனைகளை அதிகரிப்பதற்கான திருத்தங்களை துரிதப்படுத்துமாறும் அமைச்சர் மகிந்த அமரவீர பீடைகொல்லி பதிவாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# எரிபொருள் விலை குறைப்பு பலனை உடனடியாக மக்களுக்கு வழங்குங்கள்

## நிதி அமைச்சு கோரிக்கை

கொழும்பு, ஏப். 04

எரிபொருள் விலை குறைப்பின் நன்மைகளை நுகர்வோருக்கு வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொருட்கள் மற்றும் சேவை வழங்குபவர்களிடம் நிதியமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் விலை குறைப்பின் பலனை நுகர்வோருக்கு வழங்க பல நிறுவனங்கள் முன்வரவில்லை என தெரிவித்து நிதி அமைச்சுக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், எரிபொருள் விலையை குறைப்பதில் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் விசேட வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, எரிபொருளின் விலை குறைப்புடன் ஒப்பிடும் போது, அரிசியின் விலையையும் ஓரளவு குறைக்க முடியும் என நுகர்வோர் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (அ)

# சீனியில் கலப்படம்!



கொழும்பு, ஏப். 04

பல்பொருள் அங்காடிகளில் சீனி வகைகளில் கலப்படம் செய்யப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிகப்பு சீனியுடன் வெள்ளைச் சீனி கலக்கப்படுவதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து வர்த்தக விவகார அமைச்சர் கவனம் செலுத்தவேண்டுமென அவர் கோரியுள்ளார்.

ஒரு கிலோ கிராம் வெள்ளைச் சீனியின் விலை 220 ரூபா எனவும், சிவப்புச் சீனி ஒரு கிலோ கிராமின் விலை 360 ரூபா எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளைச் சீனியுடன் சிவப்புச் சீனியை கலந்து கூடிய விலைக்கு சிவப்பு சீனி என விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிவப்புச் சீனியை கொள்வனவு செய்ய மக்கள் நாட்டம் காட்டுகின்றனர்.

பல்பொருள் அங்காடிகளில் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்றால், ஒவ்வொரு பல்பொருள் அங்காடிக்கு எதிரிலும் போராட்டம் நடத்த நேரிடும் என அசேல சம்பத் கூறினார். (அ)

# மஞ்சள் விலை வீழ்ச்சி



கொழும்பு, ஏப். 04

கடந்த கொரோனா காலத்தில், ஒரு கிலோ பச்சை மஞ்சள் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலை சுமார் 1000 ரூபாவாக உயர்ந்தது.

இந்த நாட்களில் மொத்த சந்தையில் பச்சை மஞ்சள் கிலோ 50 ரூபாய்க்கும், சில்லறை விலை கிலோ 80 முதல் 100 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

பச்சை மஞ்சளின் விலை குறைந்தாலும், சில தனியார் நிறுவனங்கள், ஒரு கிலோ மஞ்சள் தூளை, 3,000 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்கின்றன.

# சிறுவர்களிடையே அதிகமாக பரவும் இன்புளுவன்சா வைரஸ்

கொழும்பு, ஏப். 04

இன்புளுவன்சா ஏ வைரஸ் சிறுவர்களிடையே அதிகமாகப் பரவும் அபாயம் காணப்படுவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் சிறுவர் சிகிச்சை நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இதற்கிடையில், தற்போதைய வெப்பமான காலநிலை காரணமாக, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அதிக தண்ணீர் குடிக்கவேண்டியது அவசியம் என்று அவர் மேலும் கூறினார். (அ)

# மூன்றாவது மாடியிலிருந்து விழுந்த மீனவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 04

மொரட்டுவை - சயுருபுர அடுக்குமாடி குடியிருப்பின் மூன்றாவது மாடியில் இருந்து நேற்று அதிகாலை நபர் ஒருவர் விழுந்து உயிரிழந்துள்ளார் என அங்குலான பொலிஸார் தெரிவித்தனர்.

சயுருபுர வீட்டுத் தொகுதியின் மூன்றாவது மாடியில் வசித்து வந்த ரசிக சம்பத் மார்ட்டின் (வயது-24) என்ற மீனவரே உயிரிழந்துள்ளார்.

அவரது மனைவி மற்றும் பெற்றோரிடமிருந்து கிடைத்த தகவலின்படி, உயிரிழந்தவர் அதிகாலை 2 மணியளவில் மரண வீட்டுக்குச் செல்வதற்காக கூறிவிட்டுச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் இரவில் வீட்டுக்கு வரும்போது வீட்டிலுள்ளவர்களின் நித்திரைக்குப் பாதகம் ஏற்படாதவாறு, மூன்றாவது மாடியின் ஜன்னல் வழியாக வீட்டுக்குள் நுழைவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என விசாரணைகளின் ஊடாக தெரியவந்ததாக பொலிஸார் கூறினர்.

விபத்து நடந்த தினம் வழக்கம் போல் ஜன்னல் வழியாக வீட்டுக்கு வரும்போது விபத்துக்குள்ளானாரா? அல்லது கொலையா என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்தியாவினால் எமக்கு பலவந்தமாக திணிக்கப்பட்டதே 13 ஆவது திருத்தம்!

## கூறுகின்றார் சரத் வீரசேகர



கொழும்பு, ஏப். 04

**13 ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவால் இலங்கைக் குப் பலவந்தமாகத் திணிக்கப்பட்டதாக பொதுஜன பெர முனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரி வித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

13ஆவது திருத்தச் சட்டம் முற்றாக அகற்றப்படவேண்டும் என்பதுதான் எனது நிலைப் பாடு. 13 ஐ நடைமுறைப்படுத் தி னால் ஒற்றையாட்சியின் கீழ் இருக்கின்ற நாடு சமஷ்டி ஆட் சிக்கு உட்படும்.

ஒற்றையாட்சியின் கீழ் நாடு முழுவதும் ஒரே நீதி. சமஷ்டி ஆட்சியின் கீழ் மாகாணத்துக்கு மாகாணம் நீதி வேறுபடும். இத னால் நாடு துண்டு துண்டாகப் பிரியும்.

வடக்குத் தமிழர்களின் துன் பத்தைப் போக்குவதற்குத் தான் சமஷ்டி தேவை என்று தமிழ் அரசியல்வாதிகள் கேட்கின்றார் கள். அப்படியென்றால் 52 வீத மான தமிழர்கள் வாழ்வது தெற் கில். வடக்குக்கு சமஷ்டியைக் கொடுத்தால் தெற்குத் தமிழர் களின் பிரச்னைகளை அது எப்படித் தீர்க்கும்?

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் சமஷ்டியைக் கேட்க வில்லை.

பிரிவினையை விரும்பும் தமிழ் அரசியல்வாதிகளும் புலம்பெயர் தமிழர்களுமே சமஷ்டியைக் கேட்கின்றனர். சில சிங்கள அரசியல்வாதிகளும் இதற்கு உதவுகின்றனர்.

தமிழ் நாட்டின் ஆதரவைப் பெறுவதற்காகத்தான் இந்திய அரசு 13ஐ வடக்குக்குக் கொடுப் பதற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

13ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவால் இலங்கைக்குப் பலவந்தமாகத் திணிக்கப்பட் டது தான்.

இதில் இருக்கின்ற பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் பிரதிப் பொலிஸ்மா அதிபர் முதலமைச்சரின் கீழ் வருவார். அப்போது பொலிஸ் அரசியல் மயமாகிவிடும். அநேகமாக 13 இல் இருக்கின்ற பல விடயங் கள் கொடுக்கப்பட்டுவிட்டன.

காணி மற்றும் பொலிஸ் அதி காரம்தான் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

உதாரணத்துக்குப் பொலிஸ் அதிகாரத்தைக் கொடுத்தால் வடக்கின் கடல் பாதுகாப்புக்கு என்று தனியான பொலிஸ் - இராணுவப் பிரிவை உருவாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னால் மத்திய அரசு அதை எதிர்க்கும். அப்போது இரு தரப்புக்கும் பிரச்னை ஏற்படும்.

அரசு மாகாண சபையின் தீர்மானத்துக்கு இடம் கொடுப் பதில்லை என்று கூறி பிரிந்து செல்வதற்கு வாய்ப்புண்டு-என் றார்.

(அ)

# பெற்றோலிய தொழில்சங்கத்தினர் பிரதமர் தினேஷுடன் சந்திப்பு!

கொழும்பு, ஏப். 04

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட பெற்றோலிய தொழிற்சங்க பிரதிநிதிகள் பிரத மர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்துள்ளனர்.

இந்த கலந்துரையாடலில் சிறீ லங்கா பொதுஜன பெர முனவின் பாராளுமன்ற உறுப் பினர் காமினி லொக்குகேவும் கலந்துகொண்டார். கலந்துரை யாடலின் பின்னர் செய்தியாளர் களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட தொழிற்சங்க பிரதிநிதிகளை மீள இணைத் துக்கொள்வது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்த னவுடன் கலந்துரையாடியதாக தெரிவித்தார்.

இதேவேளை பெற்றோலிய தொழிற்சங்க பிரதிநிதிகள் அண்மையில் முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவை விஜயராமையில் உள்ள அவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந் தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ராகுலுக்கு தண்டனை வழங்கியது போன்ற சட்டம் விரைவில் இங்கும்!

## சிறீ லங்கா பொதுஜன பெரமுன

கொழும்பு, ஏப். 04

இந்தியாவில் பிரதமர் மோடியை திருடர் என விமர் சித்த ராகுல் காந்திக்கு தண் டனை வழங்கியது போன்று, இலங்கையிலும் புதிய சட்டமூலமொன்று பாராளு மன் றத்தில் சமர்ப்பிக்கப்படும் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளை தடுத்து நிறுத்துவதற்கான மிகவும் வலுவான சட்டமூல மொன்றை கொண்டுவருவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தயார் செய்யப் பட்டுள்ளதாகவும், ஏப்ரல் மாத இறுதிக்குள் அது பாராளுமன் றத்திற்கு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய நினைக்கும் ஒவ்வொரு தலைவரையும் திருடன் என முத்திரை குத்தி அரசியலில் இருந்து அகற்றி விட்டு நாட்டை அழிப்பவர்களுக்கு இந்த சட்டத்தின்மூலம் தண்டனை வழங்கப்படும்.

நாட்டுக்காக உழைக்கும் தலைவர்களை எந்த ஆதாரமும் இல்லாமல் திருடர்கள் என்று முத்திரை குத்துவதால், நாட் டுக்காக உழைக்க எவரும் முன் வருவதை தடுப்பதே இந்த செயல்பாடுகளின் நோக்க மாகும். ஆகவே, இதற்கு தகுந்த சட்டமொன்று அவசியமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

(ஐ)

# பிரிட்டன் பாராளுமன்றத்துக்கு முன்பாக புலம்பெயர் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம்




கொழும்பு, ஏப். 04

அரசாங்கத்தால் வர்த்தமா னிப்படுத்தப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரி வித்து இங்கிலாந்தில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெ டுக்கப்பட்டது.

இங்கிலாந்திலுள்ள வெஸ்ட் மினிஸ்டருக்கு முன்னால் அங்குள்ள புலம்பெயர் அமைப் புக்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெ டுத்தன.

(அ)

# உதட்டுப் பிளவு சிகிச்சைக்கு உதவுகின்றார் பிரித்தானியர்

கொழும்பு, ஏப். 04

உயிர்த்த ஞாயிறு தாக்குத லில் தனது சகோதரர்களை இழந்த பிரித்தானியர் ஒருவர் இலங்கையில் உதட்டுப்பிளவு சத்திர சிகிச்சைக்கு உதவ முன் வந்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குத லில் தனது சகோதரர்களை இழந் தவரான டேவிட் லின்சே என்ப வரே இந்த உதவியை செய்ய வுள்ளார்.

அமெலி - டானியல் லின்சே மன்றத்தை அமைத்துள்ள டேவிட் லின்சே இலங்கையில் உதட்டுப்பிளவு சிகிச்சைகளை முன்னெடுப்பதற்காக நிபுணர்களுடன் இலங்கை வரவுள்ளார் என்று பிரிட்டனுக் கான இலங்கை தூதரகம் தெரி வித்துள்ளது.

இந்தக் குழுவினர் காலியில் நடைபெறும் உதட்டுப்பிளவு மாநாடொன்றில் கலந்துகொள் வர். பின்னர் நுவரெலியாவில் உதட்டுப்பிளவு சிகிச்சை தொடர்பில் சத்திர கிசிச்சை நிபுணர்களுக்கு உதவுவர் என்று கூறப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குத லின் போது உயிரிழந்த தனது சகோதரர்கள் அமெலி மற்றும் லின்சேயின் நினைவாகவே அமெலி - டானியல் லின்சே மன்றம் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மன்னார் நகர சபையை மாநகர சபையாக தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## பிரதமருக்கு செல்வம் அவசர கடிதம்

மன்னார், ஏப். 04

மன்னார் நகர சபையை மாநகர சபையாகத் தரம் உயர்த் துவது தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கல நாதன், பிரதமர் தினேஷ் குண வர்தனவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள் ளார்.

நேற்று அனுப்பப்பட்ட அந்த கடிதத்தில் அவர் கூறி யுள்ளதாவது: மன்னார் நகர சபையை மாநகர சபையாகத் தரம் உயர்த்துவது தொடர்பில் அமைச்சரவையில் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

எனினும், இன்னும் வர்த்த மானி அறிவித்தலில் வெளியி டப்படவில்லை என்பதனை தங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

எனவே விரைவில் மன்னார் நகர சபையை மாநகர சபை யாகத் தரம் உயர்த்துவது தொடர் பில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள் கிறேன் - என்றுள்ளது.

(அ)

# வாடகைக் காரை அடகு வைத்த மூவர் யாழ்ப்பாணத்தில் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 04

வாடகைக்காரைக் கடன் வாங்கியவரிடம் ஈடுவைத்த நபர், அதற்கு உதவிய இருவர் என்று 3 பேர் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரி வினரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

உரும்பிராய் பிரதேசத்தில் காரை வாடகைக்கு கொடுப்ப வரிடம் ஒரு மாதத்துக்கு முன் னர் காரை வாடகைக்குப் பெற் றுள்ளனர். அதற்காக ஒரு இலட் சம் ரூபா முற்பணம் கொடுத் துள்ளனர். காரைக் கொண்டு சென்ற சில நாட்களின் பின்னர் காரிலிருந்து ஜி.பி.எஸ். கருவி அகற்றப்பட்டுள்ளது. அத்து டன் வாடகைக்கு எடுத்துச் சென்றவர்களும் தொடர்பைத் துண்டித்துள்ளனர்.

இதையடுத்து காரின் உரி மையாளர் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள் ளார். அவர்கள் அது தொடர் பில் விசாரணை முன்னெடுத்து வந்தனர். இந்நிலையில் மானிப் பாய் பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட பகுதியில் வீடொன்றில் மேற்படி கார் கண்டுபிடிக்கப் பட்டது.

அவர்களிடம் முன்னெடுக் கப்பட்ட விசாரணையில், தம்மிடம் வாங்கிய 65 இலட் சம் ரூபா கடன் பணத்துக்கு இந்தக் காரை ஈடுவைத்துள்ளார் என்று தெரிவித்தனர்.

இதையடுத்து காரை வாட கைக்குப் பெற்றுச் சென்றவர், அதற்குச் சாரதியாகச் செயற்பட் டவர் மற்றும் ஈடுவைப்பதற்கு உதவிய (கடன் வழங்கியவரின் உறவினர்) ஆகியோரைப் பொலி ஸார் கைது செய்தனர். (அ)

# ஒரு வார காலக்கெடு விதித்து:
# பருத்தித்துறை மீனவர் போராட்டம் தற்காலிமாக இடைநிறுத்தப்பட்டது!

வடமராட்சி, ஏப். 04

**சட்டவிரோத கடற்றொழிலுக்கு ஒரு வாரத்துக்குள் தீர்வு என்ற பொலிஸாரின் வாக்குறுதிக்கு அமைய வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் போராட்டம் தற்காலி கமாக இடைநிறுத்தப்பட்டது.**

சுருக்கு வலை உட்பட்ட சட்ட விரோத கடற்றொழில்களை தடுத்து நிறுத்துமாறு கோரி வடமராட்சி வடக்கின் 14 கடற்றொழிலாளர் சங்கங்களால் பருத்தித்துறை பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியை முற்றுகையிட்டு நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



போராட்டம் காரணமாக பருத்தித்துறை பிரதேச செயலக செயல்பாடுகள், பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்து என்பன பாதிக்கப்பட்டன.

பிரதேச செயலர் மற்றும் பொலிஸார் போராட்டகாரர்களுடன் சமரசப் பேச்சில் ஈடுபட்ட நிலையில், கடற்படையினருடன் கலந்துரையாடி ஒரு வாரத்துக்குள் சுருக்கு வலை உட்பட்ட சட்ட விரோத கடற்றொழில்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் வாக்குறுதியளித்தனர்.

இந்நிலையில் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன் ஜனாதிபதிக்கான மனுவும் போராட்டகாரர்களால் பிரதேச செயலருக்கு வழங்கிவைக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் தமது பிரச்னை தொடர்பாக கரிசனையுடன் செயல்படுவதில்லை என போராட்டக்காரர்கள் இதன்போது குற்றஞ்சாட்டினார்.

போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட நிலையில் பிரதேச செயலக செயல்பாடுகள் பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்து என்பன இயல்பு நிலைக்கு திரும்பியது.

இதற்குத் தீர்வு கிடைக்கவில்லையெனின் மாகாணம் தழுவிய போராட்டத்தை மேற்கொள்வோம் என கடற்றொழிலாளர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், கடற்படை, பொலிஸார் இணைந்த கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யுமாறும் அதன் போது கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு பிரச்னைகளை பேசித் தீர்க்கவும் வலியுறுத்தப்பட்டது. (ஐ-02)

# சிறு குற்றவாளிகளை சிறையில் அடைக்காது மாற்று நடவடிக்கை
## நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஏப். 04

சிறிய குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை சிறைச்சாலைகளில் தடுத்துவைப்பதற்கு பதிலாக மாற்று நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறுகுற்ற சந்தேகநபர்களை ஒரு பாதுகாவலரின் கீழ் வைத்து



கண்காணிக்கும் வேலைத் திட்டமொன்று தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக இதன்போது அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# ஜெல் வடிவில் தங்கத்தை கடத்திய நால்வர் கைது!

கொழும்பு, ஏப். 04

கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக ஜெல் வடிவத்தில் கடத்தப்பட்ட பல கோடி ரூபாய் பெறுமதியான தங்கத்தை சுங்கப் பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். அத்துடன், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

11 கிலோ ஜெல் தங்கத்தை வெளிநாடு ஒன்றிலிருந்து வந்த பயணி ஒருவர் இந்த தங்கத்தை பயணிகள் பரிமாற்று பகுதியில் வரியில்லாத வர்த்தக நிலையம் ஒன்றின் முகாமையாளரிடம் கொடுத்துள்ளார்.

பின்னர் அந்த முகாமையாளர் அதனை நாட்டுக்குள் கடத்திச் செல்ல முற்பட்ட போதே கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட மற்றைய இரு சந்தேக நபர்களும் இந்திய பிரஜைகள் என்பதுடன் அவர்கள் கொண்டு வந்த 7 கிலோ தங்கமும் கைப்பற்றப்பட்டது.

தங்கம் டுபாய் அல்லது சிங்கப்பூரில் இருந்து கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது. இந்த தங்கம் ஆய்வுக்கு அனுப்பப்படவுள்ளது. (ஐ)

# மாணவர்களின் கல்வி உரிமையை இ. போ. ச. சாரதிகள் மீறக்கூடாது!
## வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன்

யாழ்ப்பாணம், ஏப். 04

வடக்கு மாகாணத்தில் உள்ள முல்லைத்தீவு வலயப் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களை அரச பேருந்துகள் தொடர்ச்சியாக ஏற்றாது செல்வது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத் துள்ளன என்று வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு வலயத்துக்கு உட்பட்ட ஏ-9 வீதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு செல்லும் மாணவர்களை இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் ஏற்றாது செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மாணவர்களின் கல்வி கற்கும் உரிமையை பறிப்பதற்கோ அல்லது தடைகளை ஏற்படுத்துவதற்கோ துணை நிற்பதை அனுமதிக்க முடியாது.



ஏ-9 வீதியில் பயணிக்கும் அரச பேருந்துகள் மாணவர்களை ஏற்கனவே செல்வது தொடர்பில் எனக்கு முறைப்பாடுகள் கிடைத்த நிலையில் உரிய தரப்பினர்களை நடவடிக்கை எடுக்கப் பணித்துள்ளேன்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகமும் குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது.

மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளை தடையின்றி மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் வட மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை ஆகியன தமது பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஆகவே, மாணவர்களின் கற்றல் செயல்பாடுகள் பாதிக்காமல் இருப்பதற்கு உரிய தரப்பினர் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயல்படாவிட்டால் நடவடிக்கை எடுக்கத் தயங்கப் போவதில்லை - என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# 8 மோட்டார் சைக்கிள்களை சூட்சுமமாக திருடியவர் கைது!

கொழும்பு, ஏப். 04

மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்யும் போர்வையில் சென்று சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 8 மோட்டார் சைக்கிள்களை சூட்சுமமான முறையில் திருடிய நபர் ஒருவரை மேல் மாகாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் இந்த மோசடிக்கு பயன்படுத்திய இரண்டு கைபேசிகள் மற்றும் நான்கு சிம் அட்டைகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள் விற்பனைக்காக இணையத்தில் விளம்பரம் செய்யப்பட்ட இடங்களை தேடி மோட்டார் சைக்கிளை பரீட்சித்துப் பார்க்கும் போர்வையில் இந்த திருட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# காதலை ஏற்காத மாணவியை கத்தியால் குத்தியவர் கைது!

கொழும்பு, ஏப். 04

ஒரு தலைக் காதலை ஏற்காத 15 வயது பாடசாலை மாணவியை ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்தியுள்ளார்.

பதுளை - கல்ஓயா பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் இயங்கி வரும் அறநெறி பாடசாலையில் 11ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவி மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

விகாரை வளாகத்துக்குள் நுழைந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு மாணவியை தாக்கியுள்ளார். சந்தேகநபரை பொலிஸார் கத்தியுடன் கைது செய்துள்ளனர்.

மாணவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு பாரதூரமான காயங்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வசந்தவின் பிணைக்கு எதிரான மனு; விசாரணைக்கு எடுக்கிறது நீதிமன்றம்!

கொழும்பு, ஏப். 04

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் வசந்த முதலிகேவை விடுதலை செய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றம் எடுத்த தீர்மானத்துக்கு எதிராக சட்டமா அதிபர் சமர்ப்பித்த மேன்முறையீட்டு மனுவை ஜூன் முதலாம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிரதிவாதி வசந்த முதலிகே நீதிமன்றத்தில் முற்பட்டார்.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க, நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்தார்.

வாதங்களை ஏற்ற நீதியரசர், இந்த மனுவை ஜூன் முதலாம் திகதி விசாரணைக்கு எடுப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

முரளிதரன் காசி விஸ்வநாதன்

# குவியும் பாலியல் புகார்கள்:

## இரவிலும் தொடரும் மாணவிகள் போராட்டம்: கலாஷேத்ரா கல்லூரியில் என்ன நடக்கிறது?

சென்னையில் உள்ள புகழ்பெற்ற கலாக்ஷேத்ரா அமைப்பில் பணியாற்றும் ஆசிரியர்கள் மீது அங்கு பயிலும் மாணவர்கள் பாலியல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளனர். இந்த விவகாரத்தில் நிர்வாகம் அலட்சியம் காட்டுவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

சென்னையில் செயல்பட்டுவரும் காலாக்ஷேத்ரா பவுண்டேஷன் தமிழகத் தலைநகரின் மிக முக்கியமான கலாசார அடையாளங்களில் ஒன்று. இங்கு, பரதநாட்டியம், கதகளி, வாய்ப்பாட்டு, வாத்திய இசை ஆகிய கவின் கலைகளில் நான்காண்டு கல்வியை முடிப்பவர்களுக்கு பட்டயச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

1993 இல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அமைப்பாக கலாக்ஷேத்ரா அங்கீகரிக்கப்பட்டது.






இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் மீது தான் தற்போது பாலியல் புகார்கள் சுமத்தப்பட்டுள்ளன. கடந்த சில நாட்களுக்கு முன்பாக, சமூக ஊடகங்களின் பிரத்யேக குழுக்களில் இது தொடர்பான புகார்கள் பதிவுசெய்யப்பட்டன.

ஆனால், ஊடகங்களிடம் வெளிப்படையாகப் பேச யாரும் அந்தத் தருணத்தில் முன்வரவில்லை. அனிதா ரத்னம் போன்ற பிரபல நடனக் கலைஞர்கள் தங்களுடைய சமூக ஊடகப் பக்கங்களில் இது குறித்து சுட்டிக்காட்டினர்.

அதாவது, கலாக்ஷேத்ராவில் பணியாற்றும் நான்கு ஆண் ஆசிரியர்கள் பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவதாகவும் இது தொடர்பாக நிர்வாகத்திடம் பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் தான் இந்தக் குற்றச்சாட்டுகளின் சாராம்சம்.

மார்ச் 21ஆம் திகதியன்று தேசிய பெண்கள் ஆணையமும் இந்த விவகாரம் குறித்து தமிழ்நாடு காவல்துறை தலைவர் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்தது. நோட்டீசும் அனுப்பப்பட்டது.

இதையடுத்து கலாக்ஷேத்ரா அமைப்பு மத்திய அரசின் மூலம் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டது.

'இந்த விவகாரம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய கலாசார அமைச்சகத்திற்கு இதுதொடர்பாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது" என்று தெரிவித்தது கலாக்ஷேத்ரா.

அதேநேரம், 'கடந்த சில மாதங்களாகவே சமூக ஊடகங்கள் மூலம் சில ஆசிரியர்கள் குறித்தும் கலாக்ஷேத்ரா குறித்தும் அவதூறு பரப்பப்படுகின்றன. காலக்ஷேத்ராவில் மிக தீவிரமாகச் செயல்படும் உள் விசாரணைக் குழு இந்தப் புகார்கள் குறித்துத் தாமாக முன்வந்து இரண்டரை மாதங்களுக்கு விசாரித்தது. ஆனால், அந்தப் புகார்கள் அடிப்படையற்றவை என்பது தெரியவந்தது," என்றுகூறி, அந்தப் புகார்களைப் புறம்தள்ளியது.

இதையடுத்து, உள் விசாரணைக் குழு நடத்திய விசாரணையில், சம்பந்தப்பட்ட மாணவியே புகாரை மறுத்திருப்பதால் இந்த விவகாரத்தை இத்தோடு மூடிவிட முடிவு செய்திருப்பதாக தேசிய பெண்கள் ஆணையம் மார்ச் 25ஆம் திகதி தெரிவித்தது.

கடந்த வாரம் புதன்கிழமையன்று கலாக்ஷேத்ராவுக்கு தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவர் ரேகா ஷர்மா நேரில் வந்து விசாரணை நடத்தினார். ஆனால், அவரிடம் சரியாகப் பேச அனுமதிக்கவில்லை என்றும் அனைவர் முன்பாகவும் விசாரணை நடத்தப்பட்டதாகவும் மாணவிகள் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில்தான் மறுநாள் வியாழக்கிழமையன்று, மாணவிகள் போராட்டத்தில் குதித்தனர். அங்கு வந்த செய்தியாளர்களுக்கு முதலில் அனுமதி மறுத்த கலாக்ஷேத்ரா நிர்வாகம், பிறகு அவர்களை உள்ளே அனுமதித்தது. ஊடகங்களிடம் பேசிய மாணவிகள் பொதுவாக சில குற்றசாட்டுகளை முன்வைத்தார்கள். சில ஆசிரியர்களின் நடத்தைகள் குறித்தும் புகார்களைத் தெரிவித்தனர்.

போராட்டம் தொடர்ந்த நிலையில், கல்லூரி மார்ச் 30ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை மூடப்படுவதாக கலாக்ஷேத்ரா அறிவித்தது. விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்கள் இரண்டு நாட்களுக்குள் விடுதியைக் காலி செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டது. இந்த நாட்களில் நடக்கும் தேர்வுகள் ஒத்தி வைக்கப்படுவதாகவும் புதிய தேதிகள் பிறகு அறிவிக்கப்படும் என்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டிருந்தது.

இந்த விடுமுறை அறிவிப்பை, தங்களது போராட்டத்தை முடக்குவதற்கான முயற்சியாகப் பார்த்த மாணவிகள் வியாழக்கிழமை இரவில் விழித்திருந்து போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்தனர். இதனால், பரபரப்பு ஏற்பட்டது.

வருவாய்க் கோட்ட அலுவலர், வட்டாட்சியர், காவல் இணை ஆணையர், துணை ஆணையர் ஆகியோர் அங்கு வந்து விசாரணையில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு வந்த காலக்ஷேத்ரா இயக்குநர் ரேவதி ராமச்சந்திரனை மாணவிகளும் பத்திரிகையாளர்களும் சூழ்ந்துகொண்டபோது, 'மாணவிகளின் பாதுகாப்புதான் எங்களுக்கு முக்கியம். அவர்கள் சொல்லும் புகார் குறித்து எல்லோரிடமும் கலந்தாலோசித்து விசாரிப்போம்," என்றார். ஆனால், 'இரண்டரை மாதங்களுக்கும் மேல் விசாரித்து ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?" எனக் கேட்டபோது, அவர் பதிலளிக்காமல் அங்கிருந்து புறப்பட்டார்.

வியாழக்கிழமை நள்ளிரவில் அங்கிருந்த காவல்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, மாணவிகள் புகார்கள் எதையும் தங்களிடம் பதிவு செய்யவில்லை என்றும் புகார் அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தனர். பிறகு, போராட்டத்தை நாளை காலை தொடரப்போவதாகக் கூறிவிட்டு அதிகாலை இரண்டு மணிவாக்கில் மாணவிகள் தங்கள் அறைகளுக்குத் திரும்பினர்.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமையன்றும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இதற்கிடையில் இந்த விவகாரம் தமிழ்நாடு சட்டப்பேரவையிலும் எதிரொலித்தது. எஸ்.எஸ். பாலாஜி, தி. வேல்முருகன், கு. செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் இதுகுறித்துக் கேள்வியெழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், 'இந்த விவகாரத்தில் காவல்துறைக்கு இதுவரை எழுத்துப்பூர்வமான புகார் ஏதும் கிடைக்கப் பெறவில்லை.

இந்த நிலையில், மாணவிகள் நடத்திய உள்ளிருப்புப் போராட்டத்தின் விளைவாக, கலாஷேத்திரா பவுன்டேஷனில் உள்ள கல்லூரிக்கு விடுமுறை அளிக்கப்பட்டு, விடுதிகளைவிட்டு மாணவிகள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அங்குள்ள மாணவிகளின் பாதுகாப்பிற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, அங்கு ஒரு பெண் ஆய்வாளர் தலைமையில் காவலர்கள் பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அரசைப் பொறுத்தவரை இந்த விவகாரத்தில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றச்சாட்டு உறுதியானால், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்," என்று கூறினார்.

தமிழக பெண்கள் ஆணையத்தின் தலைவி ஏஎஸ். குமாரி கலாக்ஷேத்ராவுக்கு வந்து மாணவிகளிடம் விசாரணை நடத்தினார். அதற்குப் பிறகு ஊடகங்களிடம் பேசிய அவர், 'இந்த விவகாரம் குறித்து அரசுக்கு அறிக்கை அளிக்கப்போவதாக" கூறினார்.

மாணவிகளைப் பொறுத்தவரை பாலியல் தொந்தரவு அளித்ததாக நான்கு பேரின் பெயர்களைச் சொல்கின்றனர். 2008ஆம் ஆண்டிலிருந்தே இதுபோன்ற பாலியல் தொந்தரவு இருப்பதாகக் கூறியும் நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கிறார்கள் மாணவர்கள்.

வியாழக்கிழமை இரவில் அங்கு சில மாணவர்களின் பெற்றோர் வந்திருந்தனர். அவர்களிடம் பேசியபோது, அங்கு நிலவும் ரகசியத்தன்மை குறித்து அதிருப்தி தெரிவித்தனர்.

'எங்கள் குழந்தைகளை இங்கே சேர்த்துவிடும்போது உள்ளே சென்றதுதான். அதற்குப் பிறகு நாங்கள் உள்ளே செல்ல முடியாது. படிப்பின் நிறைவில் ஒரு கலை நிகழ்ச்சி நடக்கும். அப்போது ஆடிட்டோரியத்திற்குச் செல்லலாம்.

மற்றபடி எங்கேயும் செல்ல முடியாது, எதுவும் கேட்க முடியாது. பிள்ளைகளின் படிப்பு பாழாகிவிடும் என்பதால் பேசாமல் இருக்க வேண்டியிருக்கிறது," என்று கூறினார் கேரளாவில் இருந்து வந்திருந்த பெற்றோர் ஒருவர்.

1936ஆம் ஆண்டில் ருக்மிணி தேவி அருண்டேல் மற்றும் ஜார்ஜ் அருண்டேல் ஆகியோரால் அடையாறில் உள்ள பிரம்மஞான சபையின் தோட்டத்தில் துவங்கப்பட்டது கலாக்ஷேத்ரா. 1962இல் இருந்து தற்போது திருவான்மியூரில் உள்ள இடத்திற்கு மாறியது. 1993இல் இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின்படி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டது. (பிபிசி)



# வள்ளுவரிலிருந்து வெடுக்குநாறிமலைக்கு?

நிலாந்தன்



வவுனியா வெடுக்குநாறிமலையில் வழிபாட்டுருக்கள் சிதைக்கப்பட்டமை திட்டவட்டமாக ஒரு பண்பாட்டுப் படுகொலைதான். ஆனால் அந்தத் தீமைக்குள் ஒரு நன்மை உண்டு. அச்சம்பவம் தமிழ்மக்களை உணர்ச்சிகரமான ஒரு புள்ளியில் ஒன்று திரட்டியுள்ளது. இது தொடர்பாக சைவமகாசபை ஒழுங்குபடுத்திய எதிர்ப்பில் ஒரு கிறிஸ்தவமதகுரு காணப்பட்டார். கத்தோலிக்கத் திருச்சபையின் நீதிக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப்பு அது தொடர்பாக ஒரு அறிக்கையும் வெளியிட்டிருக்கிறது. இது அண்மை நாட்களாக தமிழ்மக்கள் மத்தியில் மதரீதியான அகமுரண்பாடுகளைத் தூண்டிவரும் சக்திகளின் வேகத்தை ஒப்பீட்டளவில் தடுக்குமா?

ஒருபுறம் சிங்களபௌத்தமயமாக்கல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இன்னொருபுறம் இந்து - கிறீஸ்தவ முரண்பாடுகள் ஊக்குவிக்கபடுகின்றன. கடந்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஆவிக்குரியசபைப் போதகரான போல் தினகரன், அவர் கலந்துகொள்ளவிருந்த மத நிகழ்ச்சியை ரத்துச்செய்ய வேண்டியிருந்தது. அதற்கு வெளிப்படையாகச் சொல்லப்பட்ட காரணம் அவர் வணிக விசாவில் வந்தமைதான் என்று கூறப்பட்டது.

ஆனால் வெளியில் சொல்லப்படாத காரணம் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டியங்கும் ஈழத்துச் சிவசேனாவின் எதிர்ப்புதான் என்று ஊகிக்கப்படுகிறது. அல்லது சிவசேனையின் வற்புறுத்தலால் அவ்வாறு அப்போதகரை விசாரிக்க வேண்டி வந்தது என்ற ஒரு தோற்றம் உண்டாகக் கூடிய விதத்தில் அரசாங்கம் காய்களை நகர்த்தியிருக்கிறது என்றும் கூறலாம்.

போதகர் போல்தினகரன் இதற்கு முன்னரும் வந்து போயிருக்கிறார். அப்பொழுதெல்லாம் அவருக்கு வணிக விசாதான் வழங்கப்பட்டது. சுற்றுலாவிசாவில் வருகை தருபவர்கள் மதப்பிரச்சார நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

அவருக்கு விசாவை வழங்கியது சென்னையில் உள்ள இலங்கைத் துணைத்தூதரகம். அந்த விசாவை வழங்கும் பொழுது அவர் என்ன தொழிலுக்காக யாப்பாணத்துக்குப் போகிறார் என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கும். அவர் நேரடியாக யாழ்ப்பாணம் வரவில்லை. முதலில் கொழும்புக்குத்தான் வந்தார். கொழும்பில் நான்கு நாட்கள் இருந்தார். அங்கே ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார். அவருக்காகப் பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனை செய்யும் பொழுது ரணில் விக்கிரமசிங்க அவருக்கு முன் அடக்க ஒடுக்கமாக நிற்கும் ஒளிப்படம் சமூகவலைத்தளங்களில் பகிரப்படுகிறது.

அதன்பின் அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். பலாலி விமானநிலையத்தில் அவர் கிட்டத்தட்ட 4 மணித்தியாலங்கள் விசேஷமாக விசாரிக்கப்பட்டிருக்கிறார். அவரை விசாரிப்பதற்கு என்று இரண்டு அதிகாரிகள் கொழும்பிலிருந்து விசேஷமாக வருகை தந்ததாகவும் ஒரு தகவல். அந்த விசாரணையின் விளைவாக அவர் ஏற்கனவே மாணிப்பாயில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மதநிகழ்ச்சியை ரத்துச் செய்துவிட்டு தமிழ்நாட்டுக்குத் திரும்பிவிட்டார். இது தொடர்பில் அந்த மதநிகழ்வை ஒழுங்குபடுத்தியவர்கள் ஜனாதிபதியோடு தொடர்புகொள்ள முற்பட்ட போதும் திருப்தியான பதில் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதற்கு முன்னரும் அவரைப் போன்ற போதகர்கள் இலங்கைக்குள் வந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் வணிக விசாவோடுதான் வந்திருக்கிறார்கள். இப்பொழுது மட்டும் வணிகவிசா ஏன் ஒரு விவகாரமாக காட்டப்படுகிறது? அப்படியென்றால் அவரைப்போன்ற போதகர்கள் எந்த விசா எடுத்துக் கொண்டு நாட்டுக்குள் வரவேண்டும்? அதிலும் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் நடக்காத ஒரு விசாரணை ஏன் பலாலி விமானநிலையத்தில் நடந்தது? யாழ்ப்பாணம் ஒரு தனிநிர்வாக அலகா?அவ்வாறு பலாலி விமானநிலையத்தில் ஒரு விசேஷ விசாரணையை நடத்தியதன் மூலம் சிவசேனையிடமிருந்து நெருக்குதல் வருகிறது. அதனால்தான் அவ்வாறு விசாரிக்க வேண்டி வந்தது என்று காட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றதா?

எந்த ஜனாதிபதி, போதகர் போல் தினகரனிடம் ஆசீர்வாதங்களைப் பெற்றாரோ, அவருடைய அரசாங்கத்தின் இரண்டு அதிகாரிகள் போதகரை பிந்நேரம் நான்கு மணியிலிருந்து இரவு 8 மணிவரை விசாரித்திருக்கிறார்கள் என்றால் ரணில் விக்கிரமசிங்க இதில் யாருக்கு உண்மையாக இருந்திருக்கிறார்? போதகர் தினகரனுக்கா? அல்லது ஈழத்துச் சிவசேனைக்கா?

நிச்சயமாக அவர் இரண்டுதரப்புக்கும் உண்மையாக நடக்கவில்லை. மாறாக அவர் சிங்களபௌத்த அரசின் நிகழ்ச்சிநிரலுக்கு விசுவாசமாக நடந்திருக்கிறார். அதன்படி தமிழ்மக்களுக்கிடையே அகமுரண்பாடுகளைத் தூண்டும்விதத்தில் நிலைமைகள் கையாளப்பட்டிருக்கின்றன. சிவசேனை நெருக்கடிகளை கொடுத்தபடியால்தான் அந்த மதநிகழ்வை நடத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது என்று ஒரு தோற்றம் ஏற்படக் கூடிய விதத்தில் நிலைமைகள் நகர்த்தப்பட்டிருக்கின்றன. அதாவது ஆவிக்குரியசபைகளுக்கும் சிவசேனைக்கும்இடையிலான முரண்பாட்டை கூர்மைப்படுத்தும் உள்நோக்கம் உண்டா?

ஈழத்துச்சிவசேனை மேற்படி போதகரின் வருகையைப் பலமாக எதிர்த்தபடியால்தான் அவர் அவ்வாறு விசாரிக்கப்பட்டார் என்பது உண்மையென்றால் இந்தவிடயத்தில் ஈழத்துச்சிவசேனைக்கு ஏதோ ஒருவெற்றி கிடைத்திருக்கிறது என்று பொருள். அதாவது தமிழ்மக்கள் மத்தியில் அகமுரண்பாடுகளை ஊக்குவிக்கும் ஒருவெற்றி.

ஆனால் அதே ஈழத்துச்சிவசேனையால் குருந்தூர் மலையில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் கட்டுமானங்களை ஏன் அகற்ற முடியவில்லை? அல்லது வெடுக்குநாறிமலையில் சிவனாலயம் சிதைக்கப்படுவதை ஏன் தடுக்கமுடியவில்லை? திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்றில், உயர் பாதுகாப்பு வலையங்களில் சைவமரபுரிமைச் சின்னங்கள் சிதைக்கப்படுவதை ஏன் தடுக்கமுடியவில்லை?

இதுதான் கேள்வி. சிங்களபௌத்த மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈழத்துச்சிவசேனையால் வெற்றிபெற முடியவில்லை. அதாவது சிவசேனை எந்த எந்த விடயங்களில் வெற்றிபெற வேண்டும் என்பது அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரல்களின்படிதான் நடக்கிறது. அதனால்தான் ஈழத்துச்சிவசேனைக்கு சிங்களபௌத்த தீவிரவாத மதகுருவான ஞானசாரதேரர் இணக்கமானவராக தெரிகிறார். ஆனால் சக கிறிஸ்தவர்கள் விரோதிகளாகத் தெரிகிறார்கள். வடக்குகிழக்கு இணைப்பை எதிர்க்கும் கிழக்குமைய கட்சிகளுக்கு வடக்கு விரோதியாகத் தெரிகிறது. ஆனால் ராஜபக்சக்கள் நண்பர்களாகத் தெரிகிறார்கள்.

இப்பொழுது கூட்டிக் கழித்துப் பார்த்தால் விடை தெளிவாகக் கிடைக்கும். தமிழ்மக்களை பிரதேசரீதியாக் சமயரீதியாக் சாதிரீதியாகப் பிரித்துக்கையாள முற்படும் சக்திகள் அதாவது தமிழ்மக்கள் மத்தியில் உள்ள அகமுரண்பாடுகளை உருப்பெருக்கி அரசியல் செய்ய முற்படும் சக்திகள் ராஜபக்சங்களுக்கும் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்துக்கும் நண்பர்களாக இருக்கிறார்கள். ஆயின்யாருடைய நிகழ்ச்சிநிரலை அவர்கள் முன்னெடுக்கிறார்கள்?

கடந்த சில வாரங்களாக நான் எழுதிய கட்டுரைகளுக்கு எனது நண்பர் ஒருவர் வாட்ஸ்அப்பில் பதில்வினையாற்றியிருந்தார். கிறிஸ்தவ சிறுசபைகளின் மதமாற்ற நிகழ்ச்சிநிரல்தான் ஈழத்துச்சிவசேனை போன்ற அமைப்புக்களின் வளர்ச்சிக்கு காரணம் என்று அவர் கருதுகிறாரோ தெரியவில்லை. அவர் படித்தவர், பொறுப்பான அரசு உத்தியோகத்தில் இருப்பவர். குறிப்பாக தன் தொழில் வரையறைகளைத் தாண்டி சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக மகத்தான தொண்டைச் செய்பவர். ஆனால் மதம் மாற்றும் சபைகளுக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டோடு காணப்படுகிறார். தமிழ்த்தேசியத்தை மதப் பல்வகைமைகளின் மீது கட்டியெழுப்பவேண்டும் என்ற எனது விளக்கமானது மதம் மாற்றிகளுக்கு சாதகமானது என்று அவர் கருதுகிறாரோ தெரியவில்லை.

இந்த இடத்தில் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்தவேண்டும். இக்கட்டுரையானது கோட்பாட்டு ரீதியாக மதமாற்றத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் எந்தமதத்தை பின்பற்ற வேண்டும் என்பது ஒருவருடைய தனிப்பட்டஉரிமை. அந்த ஜனநாயக உரிமையில் யாரும் தலையிட முடியாது.

நான் மிகவும் மதிக்கும் ஒரு ஆன்மீகவாதி ஒருமுறை சொன்னார். மதமாற்றம் அறியாமையின் மீதே நிகழ்கிறது என்று. எல்லா மதங்களும் ஒரே இறுதியிலக்கை நோக்கித்தான் வழிநடத்துகின்றன. தான் பிறந்த மதத்தைப் பற்றிய சரியான விளக்கம் உள்ள ஒருவர் இன்னொரு மதத்திற்கு மாறவேண்டிய தேவை இருக்காது. மதம் மாறும் ஒருவர் தன்மதத்தைப் பற்றியும் விளங்கிக் கொள்ளாதவர் மாறிய மதத்தைப்பற்றியும் விளங்கிக் கொள்ளாதவர் என்று அவர் கூறுவார்.

அறியாமை தவிர மதமாற்றத்திற்கு வறுமை, சமூக ஏற்றத்தாழ்வுகள், நலன்சார் தேவைகள்.. போன்ற காரணங்களும் உண்டு. இந்தவிளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் மதமாற்றத்தின் பின்னணியில் இருக்கும் அறியாமை, வறுமை, சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றை அகற்ற வேண்டிய பொறுப்பு மதமாற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் மதப்பிரிவினருக்கு உண்டு. அதுமட்டுமல்ல தம்மை குறிப்பிட்ட ஒரு மதத்தின் காவலர்களாக காட்டிக்கொள்ளும் அனேகர் தமது மதம் கூறும் பேருண்மைகளை அறியாதவர்களே. உண்மையான ஆன்மீகவாதிகள் வெறுப்பை விதைப்பதில்லை, மகிழ்ச்சியையும் அன்பையும்தான் விதைக்கின்றார்கள்.

ஆனால் சிலநாட்களுக்கு முன் ஈழத்துச் சிவசேனையின் தலைவர் தனது இல்லத்தில் நடத்திய ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் மதமாற்றிகளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டும் என்று கூறியதாக ஒரு செய்தி வெளிவந்தது. அவர் அவ்வாறு கூறிய காலகட்டத்தில் புதிய பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்கான சட்டமூலம் வெளியிடப்பட்டிருந்தது. தமிழ்மக்கள் பயங்கரவாத தடைச்சட்டமே வேண்டாம் என்று கோரிக்கை வைக்கும் ஒரு காலகட்டத்தில் அச்சட்டத்தை பயன்படுத்தி தமிழ்மக்களில் ஒருபிரிவினரைத் தண்டிக்க வேண்டும் என்று ஒருவர் கேட்கிறார். ஆயின் அவர் யார்? அவருடைய எதிரிகள் யார்? நண்பர்கள் யார்?

ஏற்கனவே தமிழ்மக்களை பிரதேசவாதத்தின் பெயரால் பிரிக்கும் சக்திகள் தென்னிலங்கையில் உள்ள கட்சிகளின் ஆதரவோடு கிழக்கில் பலமடைந்து வருகின்றன. இப்பொழுது வடக்கை மதரீதியாகப் பிரிக்கும் சக்திகள் துடிப்பாக உழைக்கத் தொடங்கிவிட்டன. தமிழ்மக்கள் மத்தியில் உள்ள தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் அதைக் குறித்து கருத்து தெரிவிக்கத் தயங்குகின்றன. இந்தவிடயத்தில் தலையிடத் தக்கவல்லமையோடு சிவில்சமூகங்களும் இல்லை.

இப்படிப்பட்டதோர் அரசியல் சமூக ஆன்மீக வெற்றிடத்தில், நேசமுரண்பாடு எது? பகைமுரண்பாடு எது? என்ற வேறுபாடு தெரியாமல் தமிழ்ச்சமூகம் ஆளையாள் கடித்துக் குதறிக்கொண்டிருக்க, அனாவசியமான விடயங்களில் சக்தியை வீணாக்கிக் கொண்டிருக்க, சிங்கள பௌத்தமயமாக்கல் புதிய வேகத்தில் முன்னெடுக்கப்படுகிறது.

கிண்ணியா வெந்நீரூற்றில், மயிலத்தமடுமாதவனையில், குருந்தூர்மலையில், நெடுந்தீவில், கச்சதீவில் என்று பரவலாக சிங்கள பௌத்தமயமாக்கல் நடந்து கொண்டிருக்கிறது. இதில் ஆகப் பிந்திய வெடுக்குநாறிமலை விவகாரம். அது தமிழ்மக்களைத் தற்காலிகமாகவேனும் ஒருபுள்ளியில் ஒன்றிணைத்திருக்கிறது என்பது சற்று ஆறுதலான விடயம். ஒரு தீமைக்குள் கிடைத்த நன்மையது. கடந்த வாரம் திருவள்ளுவருக்குத் திருநீறு பூசலாமா இல்லையா என்ற விவகாரத்தில் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த ஒரு சமூகம் இப்பொழுது வெடுக்குநாறிமலையை நோக்கித் திரும்பியுள்ளதா?

# எல்லைக் கிராமங்களை பாதுகாக்க எந்த எல்லைக்குப் போகவும் தயார்!

## ரவிகரன் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஏப். 04

தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு எந்த எல்லைக்குப் போகவும் தயாராக உள்ளதாக வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - கருநாட்டுக் கேணியில் சிங்கள குடியேற்ற முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பூர்வீக எல்லைக் கிராமமான கருநாட்டுக்கேணித் தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளை ஆக்கிரமிப்புச் செய்து அங்கு சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளும் முயற்சிகள் தற்போது முனைப்புப் பெற்றுள்ளன.

குறிப்பாக கருநாட்டுக் கேணிப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலயத்தைச் சூழவுள்ள, தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை அபகரித்து அங்கு 180 சிங்களக் குடும்பங்களை குடியேற்றுவதற்கான முயற்சிகள் இங்கு இடம் பெறுவதாக அறிகின்றோம்.

ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளரான கீர்த்தி தென்னக்கேன் என்னும் நபருடைய வழிகாட்டுதலின் அடிப்படையில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையே இந்த சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இந்தப் பகுதிகளிலுள்ள காணிகள் அனைத்திலும் எமது தமிழ்மக்கள் பூர்வீகமாக வாழ்ந்துவந்தனர். இந்நிலையில் கடந்த 1973மற்றும், 1979ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட காணி உத்தரவுப் பத்திரங்கள் அவர்களுடைய கைகளிலே இருக்கின்றன.

இந்த கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி எனப்படுகின்ற இந்த எல்லைக் கிராமங்கள், பூர்வீக பழந்தமிழ் கிராமங்களாகும். இங்கு வாழ்ந்த மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு இந்தப் பகுதிகளிலிருந்து சிங்கள இனவெறி இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்டனர்.

அவ்வாறு வெளியேற்றப் பட்ட பின்னர் இங்குள்ள தமிள் மக்கள் நெற்பயிற்செய்கைக்காக பயன்படுத்திய நீர்ப்பாசனக் குளங்கள் அவற்றின் கீழான வயல் நிலங்கள் அனைத்தும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக் கப்பட்டன.

இந் நிலையில் தமிழ் மக்கள் 1984ஆம் ஆண்டுக்குமுன்னர் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்திய உந்திராயன் குளம், மறிச்சுக்கட்டிக்குளம், ஆமையன்குளம் ஆகிய குளங்களையும் அவற்றின் கீழான வயல் நிலங்களையும் தற்போது சிங்களவர்களே பயன்படுத்தி வருகின்றார்கள்.

இதுதவிர தமிழ் மக்களுடைய மானாவாரி விவசாய நிலங்கள் பலவும் தற்போது சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணித் தமிழ்மக்கள் தமது மானாவாரி விவசாய நிலங்களில் பயிற்செய்கை நடவடிக்கை செய்யும்போது மகாவலி அபிவிருத்தி அதிகிரசபை, வனவளத் திணைக்களம், வனஜீவ ராசிகள் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்களால் இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. சிங்கள மக்களாலும் கூட இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றது.

எமது எல்லைக் கிராமங்களிலுள்ள தமிழ் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும்பான்மையினத்தவர்களால் தாக்கப்படுவதும், தமிழர்களின் கால்நடைகள் திருடப்படுகின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

இவ்வாறாக எல்லைக் கிராமங்களிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் பலவித அழுத்தங்களுக்கு மத்தியிலேயே வாழ்கின் றனர்.

இவ்வாறான சூழலில் தற்போது தமிழ் மக்களின் குடியிருப்புக்காணிகளில் கூட சிங்களவர்களை குடியேற்றும் நடவடிக்கைகள் முனைப்புப் பெற ஆரம்பித்துள்ளன.

இவ்வாறான ஆக்கிரமிப்புச் செயல்பாடுகளின் ஊடாக, இங்கு வாழும் ஆதிக்குடிகளான தமிழ் மக்களை முற்றுமுழுதாக அப்புறப்படுத்திவிட்டு, தமிழர்களின் எல்லைக் கிராமங்களில் சிங்களவர்களை குடியேற்றவேண்டும் என்ற நோக்குடனேயே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த ஆக்கிரமிப்பு முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது. எமது தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களை பாதுகாப்பதற்கு நாம்எந்த எல்லைக்கும் போகத்தயாராக உள்ளோம் - என்றார். (ஐ)






# தமிழரசு ரணிலுடன் பேசி தமிழரின் உரிமைகளை பெற்றுத்தரவேண்டும்!

## தந்தை செல்வா நினைவுரையில் ஜெயசிறில் கருத்து

அக்கரைப்பற்று, ஏப். 04

**"நாம் அன்று தொடக்கம் இன்று வரைக்கும் ஆதரவளித்து வரும் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையைச் செய்து எமது உரிமைகளை மற்றும் தேவைகளை பெற்றுத் தரவேண்டும் என்று தமிழ் மக்கள் கேட்கின்றார்கள். இதனை தமிழரசுக் கட்சி தலைமைத்துவங்கள் சிந்திக்க வேண்டும்."**

இவ்வாறு அம்பாறையில் இடம் பெற்ற தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த நாள் நினைவு விழாவில் உரையாற்றிய இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திற்கான தந்தை செல்வா பிறந்த நினைவு தின நிகழ்வு திருக்கோவில் காயத்ரி கிராமத்தில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் நந்தபாலு தலைமையில் நடைபெற்ற போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்- தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அன்று தொடக்கம் இன்று வரை ஐக்கிய தேசியக் கட்சிக்கு அல்லது அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிந்தோ தெரியாமலோ ஆதரவளித்து வந்திருக்கின்றது. இதில் ஒளிவு மறைவு இல்லை. இன்று அதே ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வந்திருக்கிறார்.

எனவே அந்த ரணில் விக்கிரமசிங்கவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களை செய்து எமது தமிழ் மக்களின் உரிமைகளை தேவைகளை எமது தமிழ்த் தலைமைகள் பெற்றுத்தரவேண்டும் என்று பல தமிழ்மக்கள் என்னிடம் கோரியிருந்தார்கள். அதனையே இங்கு நான் பகிரங்கமாக கூறுகின்றேன். கட்சித் தலைமைகள் சிந்திக்கவேண்டும் .நாங்கள் நாட்டைச் சூறையாடிய கொள்ளையர்களான மகிந்தவையோ கோட்டாவையோ ஒருபோதும் ஆதரிக்கவில்லை . ஆதரிக்கப் போவதுமில்லை.

69 லட்சம் வாக்குகளை சிங்கள மக்கள் அன்று வழங்கியிருந்தார்கள். இன்று அது தவறு என்பதை உணரத் தொடங்கி இருக்கின்றார்கள். ஆனால் நாம் அன்றும் இன்றும் ரணிலுக்கு ஆதரவாக இருந்திருக்கின்றோம். எனவே அவரைப் பயன்படுத்த வேண்டும். அது எமது தார்மீக கடமையும் நியாயமான உரிமையுமாகும்.

அதற்காக நாம் சோரம் போக தேவை இல்லை. அவருடன் நியாயமான உரிமைகள் பற்றி பேசி ஒப்பந்தம் உடன்படிக்கை செய்து தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்-என்றார். (அ)

# அம்பாறையில் ஒரேயொரு தமிழர் நிர்வாக அதிகாரியாக உயர்வு!

அம்பாறை, ஏப். 04

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை வெளியான முகாமைத்துவ உதவியாளர் சுப்ரா ரக பரீட்சையில் ஒரே ஒரு தமிழ் உத்தியோகத்தர் தெரிவாகியுள்ளார்.

காரைதீவு பிரதேச செயலகத்தின் நிதி உதவியாளராக பணியாற்றும் ஆர்.கணேசமூர்த்தி இவ்வாறு சுப்ரா பரீட்சையில் சித்தி அடைந்து நிர்வாக உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



காரைதீவைச் சேர்ந்த கணேசமூர்த்தி முன்னர் கல்முனை வடக்கு பிரதேச செயலக பதில் நிர்வாக உத்தியோகத்தராக பல வருடங்கள் சேவையாற்றி வந்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இப் பரீட்சையில் தெரிவான ஏனையோர் அனைவரும் சிங்கள முஸ்லிம் உத்தியோகத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# 50ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்கிறது கோட்டைமுனை விளையாட்டுக்கழகம்

மட்டக்களப்பு, ஏப். 04

இலங்கையில் மிகவும் பழமையான விளையாட்டுக்கழகங்களில் ஒன்றாக கருதப்படும் மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

50ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு சீருடை, தொப்பி அறிமுகம் மற்றும் இணையத்தள அங்குரார்ப்பணம், பாடல் வெளியீடு என்பன மட்டக்களப்பு கல்லடியில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

1972ஆம் ஆண்டு கோட்டைமுனை யுத் என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த விளையாட்டுக்கழகம் பின்னாளில் கோட்டைமுனை விளையாட்டுக்கழகமாக கிழக்கு மாகாணத்தில் பல்வேறுவிதான சூழ்நிலைகள் நிலவிய காலப்பகுதியிலும் இளைஞர்களை உள்ளீர்த்து தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் இளைஞர்களை கொண்டு சென்று வெற்றி வாகை சூடிய கழகமாக இருந்துவருகின்றது.

கோட்டைமுனை விளையாட்டுக்கழகத்தின் ஊடாக தேசிய கிரிக்கெட் அணிக்கும் வீரர்களை கொண்டு செல்லும் வகையில் சர்வதேச ரீதியான கிரிக்கெட் பயிற்சியாளராக கடமையாற்றும் மலிங்க சொரபுலிகே இதன் போது அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். (அ)

# ஓட்டமாவடிப் பகுதியில் யானைகள் அட்டகாசம்




மட்டக்கலப்பு, ஏப். 04

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் ஜனவரி தொடக்கம் இன்று வரை 650 இற்கும் மேற்பட்ட தென்னை மரங்களை யானைகள் சேதப்படுத்தியுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காகிதநகர் கிராம சேவகர் பிரிவில் உள்ள மஜ்மா நகர் கிழக்கு, மஜ்மாநகர் மேற்கு, காகிதநகர் போன்ற கிராமங்களுக்குள் தொடர்ந்து வரும் யானைகளின் அட்டகாசத்தால் தங்களது இருப்பிடங்கள் சேதமடைந்துள்ளதுடன் வீட்டுத்தோட்டப் பயிர்கள் சேதமடைவதாகவும், உயிர்களுக்கும் உத்தரவாதமில்லாமல் அச்சத்திலயே ஒவ்வொரு நாளையும் கழிக்கின்றோம் என்றும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

பதினைந்து வருடங்களுக்கும் அதிகமாக பல சிரமங்களுக்கு மத்தியில் உருவாக்கிய மரங்களை பயன் பெறுவதற்கு முன்பே யானைகள் வந்து அழித்துவிட்டுச் செல்வதாகவும் ஒவ்வொரு வருடமும் இதே நிலை காணப்படுவதாகவும் மக்கள் கூறினர்.

அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் வந்து பிரதேசத்தைப் பார்வையிட்டுவிட்டு இப்பகுதிக்கு கட்டாயம் யானை வேலி அமைக்கவேண்டும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம் என்று தெரிவித்துச் சென்றார்கள். பின்னர் அவர்களை காணமுடிவதில்லை என்றும் மக்கள் குறைப்பட்டனர். (அ)

# திடீரென தீப்பிடித்தது கடை

அம்பாறை, ஏப். 04



அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற் குட்பட்ட ஓட்டோ பஸார் சந்தி அருகில் இருந்த வாழைப்பழம் மற்றும் இடியப்பம் விற்கும் கடை நேற்று முன்தினம் மதியம் திடிரென தீப்பிடித்து சாம்பராகியது.

குறித்த சம்பவம் அறிந்து கல்முனை மாநகர தீயணைப்பு பிரிவினரும் கல்முனை தலைமையக பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு சென்று தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

குறித்த தீ விபத்தி னால் கடையில் இருந்த பெறுமதியான பொருட்கள் முற்றாக சேதமடைந்தன.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இந்து கலைஞர் விவரம் திரட்டும் பணி ஆரம்பம்



அக்கரைப்பற்று, ஏப். 04

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகம் இணைந்து அம்பாறை மாவட்டத்திலுள்ள இந்து கலைஞர்கள் தொடர்பான விவரங்களை திரட்டும் பணி இடம் பெற்று வருகின்றது.

முதலாவது கூட்டம் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே. ஜெகதீசன் தலைமையில் காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலஞர்கள் விவரங்கள்,கலைஞர்களின் ஆக்கங்கள், கலைஞர்கள் பெற்ற விருதுகள் தொடர்பான விவரங்கள், சமூகத்தில் கலைஞர்களின் பங்களிப்பு, கலைஞர்களுக்கு எதிர்காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன.

இதில் மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ,சம்மாந்துறை இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி கௌசல்யவாணி, காரைதீவு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி சி.சிவலோஜினி,கல்முனை வடக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி க.சுஜித்திரா, நிந்தவூர் கலாசார உத்தியோகத்தர் திருமதி பா.சுஜிவனி,மற்றும் காரைதீவு,கல்முனை வடக்கு ,சம்மாந்துறை கலஞர்கள் கலந்து கொண்டனர். (அ)



வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பங்குனி உத்தர அலங்கார உற்சவம் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்களின் பூசையுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நாளை புதன்கிழமை தீர்த்தத்துடன் நிறைவடைகிறது. (அ)

# எலெக்றிக் ஸ்கூட்டர்களை தடை செய்வதற்கு ஆதரவு!

## பாரிஸ் நகரவாசிகள் அமோக வாக்களிப்பு



பாரிஸ், ஏப். 04

**பாரிஸ் நகரில் மின்னேற்றப்பட்ட எலெக்றிக் ஸ்கூட்டர்களை வாடகை சேவையில் ஈடுபடுத்துவதைத் தடை செய்வதற்கு ஆதரவாக நகரவாசிகள் அமோகமாக வாக்களித்துள்ளனர். அதனை அடுத்து அவற்றின் வாடகை சேவைகள் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

சில தனியார் நிறுவனங்களால் வாடகை சேவைக்கு விடப்பட்டுள்ள சுமார் 15 ஆயிரம் ஸ்கூட்டர்களையும் தொடர்ந்தும் பாவனைக்கு அனுமதிப்பதா வேண்டாமா என்பதைத் தீர்மானிப்பதற்காக பாரிஸ் நகர நிர்வாகப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் மத்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் ஸ்கூட்டர் வாடகை சேவைகளைத் தடை செய்வதற்கு ஆதரவாக 89.03மூ வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன.

தலைநகரின் சகல நிர்வாகப் பிராந்தியங்களிலும் எதிரான வாக்குகளே அதிகம் பதிவாகியுள்ளன.

நகரின் மைய நிர்வாகப் பகுதியில் 91,77மூவீதமான வாக்காளர்கள் ஸ்கூட்டர் சேவைகளுக்கு எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளனர்.

பாரிஸ் நகர சபையால் நடத்தப்பட்ட இந்தக் கருத்தறியும் வாக்கு முடிவுகளை அடுத்து ஸ்கூட்டர்களை வாடகை சேவையில் ஈடுபடுத்தி வருகின்ற வெளிநாடு நிறுவனங்களது உரிமங்களை நகர நிர்வாகம் புதுப்பிக்க மாட்டாது. இதனால் கோடை விடுமுறை காலத்துக்குப் பின்னர் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கும் சமயத்தில் ஸ்கூட்டர்களைத் தலை நகரில் காணமுடியாதிருக்கும்.

சொந்தமாகத் தனிப்பட்ட முறையில் ஸ்கூட்டர்களை வாங்கி வைத்துப் பயன்படுத்துவோரை வாக்கெடுப்பு முடிவு எந்த விதத்திலும் பாதிக்காது.

மிக இலகுவானதும் சுயமாக இயக்கிச் செல்லக்கூடியதுமான இந்த ஸ்கூட்டர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தலைநகரில் பிரபலமடைந்திருந்தன. குறுகிய தூரப் பயணங்களுக்கு அவற்றைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை பெருகியது. குறிப்பாக இளவயதினரிடம் அது அதிக செல்வாக்குப் பெற்றிருந்தது.

வெளிநாட்டு நிறுவனங்கள் உட்பட பல கம்பனிகள் போட்டி போட்டுக் கொண்டு பல்லாயிரக் கணக்கான ஸ்கூட்டர்களை நகரில் மிகக் குறைந்த வாடகைக் கட்டணத்துடன் ஏட்டிக்குப் போட்டியாக சேவைக்கு விட்டிருந்தன.எலெக்றிக் ஸ்கூட்டர்களின் இந்தத் திடீர் பெருக்கம் பின்னாளில் பாதசாரிகளுக்கும் பொதுப் போக்குவரத்துக்கும் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தின. உயிரிழப்புகள் ஏற்படும் அளவுக்கு விபத்துகள் நிகழ்ந்தன. உரிய தரிப்பிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தும் அவை கண்ட கண்ட இடங்களில் தரிக்க விடப்பட்டுவந்தன.

பொதுப் போக்குவரத்து ஒழுங்குகள் மீறப்படுகின்றன என்று தெரிவித்து பாரிஸ் நகர சபைக்கு அழுத்தங்கள் அதிகரித்தன. அதனால் அவற்றை வாடகைக்கு விடுகின்ற நிறுவனங்கள் மீது பல கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் அடிக்கடி விதிக்கப்பட்டுவந்தன.

கலிபோர்னியாவைச் சேர்ந்த லைம், நெதர்லாந்து - பிரான்ஸ் கூட்டு நிறுவனமான டொட், ஜேர்மனியின் ரியர் ஆகிய மூன்று கம்பனிகளுக்கும் சொந்தமான 15 ஆயிரம் ஸ்கூட்டர்கள் மாத்திரமே தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளன.

அவற்றின் வேகம் நகரின் சகல பகுதிகளிலும் மணிக்கு 20 கிலோ மீற்றர்களாக வரையறுக்கப்பட்டுள்ளது.

நெருக்கடியான சில இடங்களில் வேகம் 10 கிலோ மீற்றர்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த மூன்று நிறுவனங்களினதும் அனுமதி மார்ச் மாதத்துடன் நிறைவடைந்தது. இந்தக் கட்டத்திலேயே அவற்றைத் தொடர்ந்து சேவைக்கு அனுமதிப்பதா என்பதை அறிவதற்காக வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதேவேளை, இவ்வாறான எலெக்ட்ரிக் ஸ்கூட்டர்களைச் செலுத்துவோரின் வயது எல்லையை அரசு 12 இல் இருந்து 14 ஆக உயர்த்தி உள்ளது.

அவை தொடர்பான விதி மீறல்களுக்கான தண்டப்பணமும் குறைந்தது 135 ஈரோக்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)




# பப்புவா நியூ கினியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

போர்ட் மொறெஸ்பி, ஏப். 04

பப்புவா நியூ கினியாவில் 7.0 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. எனினும், இதனால் சுனாமி அச்சுறுத்தல் விடுக்கப்படவில்லை.

நேற்று திங்கட்கிழமை உள்ளூர் நேரப்படி அதிகாலை 3:04 மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கம், அம்புண்டிக்கு கிழக்கே 37 கிலோமீட்டர் தொலைவில் அல்லது கிழக்கு செபிக் மாகாணத்தின் தலைநகரான வெவாக்கிலிருந்து 96 கிலோமீற்றர் தென்மேற்கில் உள்ள சாம்பிரி ஏரியில் மையம் கொண்டிருந்தது.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தின் தகவலின்படி, 7.0 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியது. இது மேற்பரப்பில் இருந்து சுமார் 62 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது. இது மிகவும் ஆழமான நிலநடுக்கமென்பதால் பாதிப்புக்கள் குறைவாகவே இருக்கும் என்று பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தின் மையப்பகுதியிலிருந்து 249 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தெற்கு ஹைலேண்ட் மாகாணத்தில் வசிப்பவர், நிலநடுக்கத்தை வலுவானது என்று விவரித்தார். (அ)

# நேட்டோ நட்பு நாடுகளின் எல்லை அருகே அணு ஆயுதங்களை நிலைநிறுத்தும் ரஷ்யா!

மொஸ்கோ, ஏப். 04

நேட்டோ நட்பு நாடுகளின் எல்லைகளுக்கு அருகில் தந்திரோபாய அணு ஆயுதங்களை நிலைநிறுத்த ரஷ்யா தீர்மானித்துள்ளது.



மேற்கு நாடுகளுடன் தொடர்ந்து பதற்றங்கள் அதிகரித்துவரும் நிலையில், பெலாரஸ் நாட்டின் ரஷ்ய தூதர் போரிஸ் கிரிஸ்லோவ் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக நாட்டின் மேற்கு எல்லைக்கு ஆயுதங்கள் நகர்த்தப்படும் என போரிஸ் கிரிஸ்லோவ் தெரிவித்தார்.

ஆயுதங்கள் எங்கு நிலைநிறுத்தப்படும் என்பதை சரியாகக் குறிப்பிடாமல், ஜூலை முதலாம் திகதிக்குள் இதற்கான பணிகள் நிறைவடையும் என கிரிஸ்லோவ் மேலும் தெரிவித்தார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவில் சோவியத் விரிவாக்கத்தைத் தடுக்க முதலில் நிறுவப்பட்ட இராணுவக் கூட்டணியான நேட்டோவின் உறுப்பு நாடுகளான லிதுவேனியா, லாட்வியா மற்றும் போலந்துடன் பெலாரஸ் எல்லைகளைப் பகிர்ந்து கொள்கின்றது.

கடந்த ஆண்டு பெப்ரவரியில் ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்ததில் இருந்து எஸ்டோனியா, லத்வியா, லித்துவேனியா மற்றும் போலந்தில் நிலைகொண்டுள்ள தனது துருப்புக்களின் எண்ணிக்கையை நேட்டோ கிட்டத்தட்ட பத்து மடங்கு அதிகரித்துள்ளது.

தந்திரோபாய அணு ஆயுதங்கள் மூலோபாய அணு ஆயுதங்களை விட குறுகிய வரம்பை கொண்டவை மற்றும் போர்க்களத்தில் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை மேற்கொள்ள இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. (அ)

# பின்லாந்து பாராளுமன்றத் தேர்தல்: மத்திய வலதுசாரி கூட்டணி வெற்றி!

ஹெல்சிங்கி, ஏப். 04

பின்லாந்தில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில், முக்கிய கன்சர்வேடிவ் கட்சியான மத்திய வலதுசாரி தேசிய கூட்டணி கடுமையான போராட்டத்திற்கு மத்தியில் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்ட நிலையில், மத்திய வலதுசாரி தேசிய கூட்டணி கட்சி (என்சிபி) 20.8 சதவீத வாக்குகளுடன் முதலிடம் பிடித்தது. அவர்களைத் தொடர்ந்து வலதுசாரி ஜனரஞ்சகக் கட்சியான திஃபின்ஸ் 20.1 சதவீதத்துடன், பிரதமர் சன்னா மரின் சமூக ஜனநாயகக் கட்சியினர் 19.9 சதவீதத்தைப் பெற்றனர்.

முதல் மூன்று கட்சிகளும் தலா 20 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ள நிலையில், எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி அமைக்கும் நிலையில் இல்லை. நோர்டிக் நாட்டின் பாராளுமன்றத்தில் 200 இடங்களுக்கு 22 கட்சிகளைச் சேர்ந்த 2,400க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

தலைநகர் ஹெல்சிங்கியில் உள்ள ஒரு உணவகத்தில் ஆதரவாளர்களால் சூழப்பட்ட நிலையில், 'எங்களுக்கு மிகப்பெரிய ஆணை கிடைத்துள்ளது' என்று மத்திய வலதுசாரி தேசிய கூட்டணி கட்சி தலைவர் பெட்டேரி ஓர்போ கூறினார்.

'இந்த முடிவின் அடிப்படையில், தேசிய கூட்டணி கட்சியின் தலைமையில் பின்லாந்தில் புதிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படும்,' என்று அவர் கூறினார்.

37 வயதில் ஐரோப்பாவின் இளம் தலைவர்களில் ஒருவரான மரின், தோல்வியை ஒப்புக் கொண்ட அதேவேளை, தேர்தலில் வெற்றி பெற்றவருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

உலகெங்கிலும் உள்ள ரசிகர்களால் முற்போக்கான புதிய தலைவர்களுக்கு ஆயிரம் வருட முன்மாதிரியாக கருதப்படும் மரின், உக்ரைனுக்கு குரல் கொடுத்ததற்காகவும், நேட்டோவில் சேர பின்லாந்தின் வெற்றிகரமான விண்ணப்பத்தை ஆதரிப்பதில் ஜனாதிபதி சவுலி நினிஸ்டோவுடன் இணைந்து அவரது முக்கிய பங்கிற்காகவும் சர்வதேச பாராட்டைப் பெற்றார்.

ஆனால் வீட்டில், அவர் தனது விருந்து மற்றும் ஓய்வூதியம் மற்றும் கல்வி உட்பட அவரது அரசாங்கத்தின் ஆடம்பரமான பொதுச் செலவுகளுக்காக கடுமையான விமர்சனங்களையும் எதிர்கொண்டார். (அ)

# கோலி - டு பிளெசிஸ் அபார ஆட்டம் மும்பையை வீழ்த்தியது பெங்களூர்!

பெங்களூர், ஏப். 04

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரின் 5ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

172 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய அந்த அணிக்கு விராட் கோலி - டு பிளெசிஸ் இணை அபார தொடக்கம் கொடுத்தது.



பெங்களூரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி களத் தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி, அணி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணியின் முதல் வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பினர். 48 ஓட்டங்கள் எடுப்பதற்குள் அந்த அணி முதல் 4 விக்கெட்களை இழந்தது.

அந்த அணியின் இளம் வீரர் திலக் வர்மா தனியாளாக அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்த்தினார். அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்த அவர் 84 ஓட்டங்கள் எடுத்தார். அதனால், 20 ஓவர் முடிவில் மும்பை இந்தியன்ஸ் அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்கள் சேர்த்தது. கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த திலக் வர்மா 46 பந்துகளில் 9 பௌண்ட்ரி, 4 சிக்ஸர்களுடன் 84 ஓட்டங்கள் எடுத்திருந்தார். பெங்களூர் அணி தரப்பில் கரண் சர்மா 2 விக்கெட் எடுத்தார்.

இதையடுத்து 172 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்குகிய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு விராட் கோலி - டு பிளெசிஸ் இணை அபார தொடக்கம் கொடுத்தது. இருவரும் சேர்ந்து மும்பை பந்துவீச்சை பதம் பார்த்தனர். மைதானத்தின் நாலாபுறமும் பந்துகளை பறக்கவிட்ட இருவரும் அடுத்தடுத்து அரைச்சதம் அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினர். இருவரையும் ஆட்டமிழக்க செய்ய மும்பை பந்துவீச்சாளர்கள் எடுத்த முயற்சி தோல்வி கண்டது.

இறுதியாக 15ஆவது ஓவரில் தான் டு பிளெசிஸை ஆட்டமிழக்க செய்ய முடிந்தது. இருவரும் சேர்ந்து 148 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். இதன்பின் வந்த தினேஷ் கார்த்திக் வந்த வேகத்தில் மீண்டும் பெவிலியனுக்கு திரும்பினார். மக்ஸ்வெல் முதல் இரண்டு பந்துகளில் தலா ஒரு சிக்ஸ், பௌண்ட்ரி என விளாச, கடைசியில் வெற்றிக்கு ஆறு ஓட்டங்கள் தேவைப்பட சிக்ஸ் அடித்து வெற்றிபெற வைத்தார் விராட் கோலி.

இதனால் 16.2 ஓவர்களிலேயே 172 ஓட்டங்கள் இலக்கை எட்டி 8 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூர் அணி அபார வெற்றிபெற்றது. கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த விராட் கோலி 82 ஓட்டங்களும் டு பிளெசிஸ் 73 ஓட்டங்களும் எடுத்தனர். (ஐ)



## மியாமி ஓப்பன் ரென்னிஸ் சம்பியனானார் மெத்வதேவ்

மியாமி, ஏப். 04

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் டேனில் மெத்வதேவ் சம்பியன் பட்டம் வென்றார்.

புகழ்பெற்ற மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடந்தது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் இத்தாலி வீரர் ஜானிக் சின்னர், முன்னாள் முதல்நிலை வீரரான ரஷ்யாவின் டேனில் மெத்வதேவுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் டேனில் மெத்வதேவ் 7-5, 6-3 என்ற நேர் செற் கணக்கில் சின்னரை வீழ்த்தி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றார். (ஐ)

நெதர்லாந்துடனான ஒருநாள் தொடர்

## மார்க்ரம் 175 ஓட்டங்கள் குவிப்பு; தொடர் தென்னாபிரிக்கா வசம்!

ஜொகன்னர்பேர்க், ஏப். 04

மார்க்ரமின் அதிரடியான 175 ஓட்டங்கள் குவிப்பு கைகொடுக்க இரண்டாவது போட்டியிலும் வென்ற தென்னாபிரிக்க அணி நெதர்லாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தென்னாபிரிக்கா - நெதர்லாந்து அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஜொகன்னஸ்பேர்க்கில் நேற்றுமுன்தினம் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 370 ஓட்டங்கள் குவித்தது.

சகலதுறை வீரர் அய்டன் மார்க்ரம் 175 ஓட்டங்களை (126 பந்து, 17 பௌண்ட்ரி, 7 சிக்ஸர்) குவித்தார். ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க வீரர்களில் யாரும் இதுவரை இரட்டை சதம் அடித்ததில்லை. அந்த நீண்ட கால ஏக்கத்தை தணிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மார்க்ரம் 45ஆவது ஓவரில் ஆட்டமிழந்தார். டேவிட் மில்லர் 91 ஓட்டங்கள் (61 பந்து, 6



பௌண்ட்ரி, 4 சிக்ஸர்) நொறுக்கினார்.

பின்னர் ஆடிய நெதர்லாந்து 39.1 ஓவர்களில் 224 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதனால் தென்னாபிரிக்கா 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வேகப்பந்து வீச்சாளர் சிசான்டா மகாலா 5 விக்கெட்களை அள்ளினார்.

3 போட்டிகள் கொண்ட இந்த தொடரை தென்னாபிரிக்கா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

முதல் ஆட்டம் மழையால் பாதியில் இரத்தானது. இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ணத் தொடருக்கு நேரடியாக தகுதி பெறும் வாய்ப்பை கிட்டத்தட்ட உறுதிப் படுத்தியுள்ளது.

# ஹைதராபாத்துக்கு எதிராக ராஜஸ்தான் இலகு வெற்றி!

ஹைதராபாத், ஏப். 04

சன்ரைசஸ் ஹைதராபாத்துக்கு எதிரான ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நடப்பு ஐ. பி. எல். இருபது - 20 தொடரின் மூன்றாவது போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் நேற்று முன்தினம் பலப்பரீட்சை நடத்தின.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி ராஜஸ்தான் அணிக்கு யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஜோஸ் பட்லர் இணை தொடக்கம் கொடுத்தது. அதிரடி காட்டிய இந்த இணையை 6ஆவது ஓவரில் பசல்ஹக் பரூக்கி பிரித்து பட்லரை 54 ஓட்டங்களில் வெளியேற்றினார். அவரைத் தொடர்ந்து யஷஸ்வி ஜெய்ஸ்வாலும் 54 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

தேவ்தத் படிக்கல் 2 ஓட்டங்களிலும் றியான் பராக் 7 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். மற்றொருபுறம் சஞ்சு சாம்சன் நிலைத்து ஆடி ஓட்டங்களை சேர்த்தார். ஆனால், அவரும் 19ஆவது ஓவரில் நடராஜனால் 55 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 5 விக்கெட் இழப்புக்கு 203 ஓட்டங்களை குவித்தது.

ஹெட்மேயர் 22 ஓட்டங்களுடனும், அஸ்வின் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர். ஹைதராபாத் அணியின் பந்துவீச்சில் பசல்ஹக் பாரூக்கி, நடராஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், உம்ரன் மலிக் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு தொடக்கமே மோசமாக அமைந்தது. ட்ரண்ட் போல்ட் வீசிய முதல் ஓவரில் அபிஷேக் ஷர்மா, ராகுல் திரிபாதி ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் பெவிலியன் திரும்பினர்.

முதல் ஓவரிலேயே 2 விக்கெட்டுக்கு ஓட்டம் எதுவுமில்லாமல் ரசிகர்கள் மனதில் அச்சத்தை விதைத்தது ஹைதாராபாத். அடுத்து ஹாரி ப்ரூக், மயங்க் அகர்வால் இணைப்பாட்டம் அமைத்தனர். ஆனால், அதன் இறுக்கம் தளர்ந்ததால் 7ஆவது ஓவரில் ப்ரூக் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த வாஷிங்டன் சுந்தர் 1, க்ளன் ப்ளிப்ஸ் 8



ஓட்டங்களிலும் வெளியேற மயங்க் அகர்வாலும் 27 ஓட்டங்களில் நடையைக் கட்டினார். ஆதில் ரஷித் 18 ஓட்டங்களைச் சேர்க்க 17 ஓவர் முடிவில் ஹைதராபாத் 7 விக்கெட்டை இழந்து 92 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது. வேனஸ்குமார் 6 ஓட்டங்களுடன் சுருண்டார்.

இதையடுத்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் ஹைதராபாத் அணி 8 விக்கெட் இழப்புக்கு 131 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது. அப்துல் சமத் 32 ஓட்டங்களுடனும், உம்ரன் மலிக் 19 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இதன்மூலம் ராஜஸ்தான் 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹைதராபாத்தை வெற்றிகொண்டது.

ராஜஸ்தான் பந்துவீச்சில் சாஹல் 4 விக்கெட்களையும், ட்ரண்ட் போல்ட் 2 விக்கெட்களையும், அஸ்வின், ஜேசன் ஹோல்டர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# ராஜபக்ஷக்களின் காவலனாக ரணில்

## இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 04

**"இலங்கையில் உழைக்காமலே வாழுகின்ற ஒரு கூட்டமே மகிந்த ராஜபக்ஷவின் கூட்டமாகும்." - என்று மலையக மக்கள் முன்னணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.**

அக்கரப்பத்தனை பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எமது நாட்டு பொருளாதாரத்தை நாமசமாக்கிய ராஜபக்சக்களை மக்கள் விரட்டினார்கள். ஆனால் அவர்களை காப்பாற்ற பரமாத்மாபோல் ரணில் விக்கிரமசிங்க வந்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி காலத்தில் நல்லவராக இருந்தார். இந்த ஆட்சியில் அவர் மோசமானவராக உருவெடுத்து இருக்கிறார்.

நாட்டில் யுத்தம் இடம்பெற்றபோது, தமிழர்களை அடக்குவதற்கு கொண்டு வரப்பட்ட ஒரு சட்டம்தான் இந்த பயங்கரவாத தடைச் சட்டம் . அந்த காலத்தில் சிங்களவர்களுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது. இன்று அந்த சட்டம் மாறு பட்டு உள்ளது. இந்த பயங்கரவாத சட்டத்தின் ஊடாக ஒரு நபர் கைது செய்யப்பட்டால் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த பயங்கரவாத தடைசட்டத்தை தமிழ் முற்போக்கு கூட்டணி முழுமையாக எதிர்க்கிறது.-என்றார். (அ)

# பாடசாலை முதல் தவணை விடுமுறை இன்று ஆரம்பம்

கொழும்பு, ஏப். 04

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளுக்கு இன்று முதல் விடுமுறை வழங்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, 2023 ஆம் ஆண்டுக்கான முதல் பாடசாலை கல்விச் செயற்பாடுகளின் இரண்டாம் கட்டம் ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் தொடங்க உள்ளது.

இரண்டாம் கட்ட பாடசாலை தவணை மே 12 வெள்ளிக்கிழமை வரை நடைபெற உள்ளதோடு, மே 13 முதல் மீண்டும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

முதல் தவணையின் மூன்றாம் கட்டம் மே 25ஆம் திகதி தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்களில் விசேட சோதனை

கொழும்பு, ஏப். 04

குறைக்கப்பட்ட பேருந்து கட்டணத்தை காட்சிப்படுத்தாமல் பயணிகளிடம் அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்களை சோதனை செய்யும் வேலைத்திட்டம் மேல் மாகாணத்தில் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

பஸ் கட்டணப் பதிவேட்டை பயணிகள் முன்னிலையில் காட்சிப்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி எரிபொருள் விலை குறைக்கப்பட்ட நிலையில், கடந்த 31ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பஸ் கட்டணங்கள் திருத்தப்பட்டன.

பின்னர் பிரதேச செயலகத்தினால் திருத்தப்பட்ட ஆவணம் பஸ் உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்து எச்சரிக்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை

கொழும்பு, ஏப். 04

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

எந்தவொரு பயங்கரவாத எதிர்ப்பு விதிகளும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு இணங்க வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

சிரேஷ்ட பணிப்பாளர் டிப்ரோஸ் முச்செனா தலைமையிலான குழு மார்ச் 27 முதல் நேற்று முன்தினம் வரை இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

அதில் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமையை நிலைநாட்டவும் பாதுகாக்கவும் தொடர்ந்து பணியாற்றுவோம் என்றும் அது கூறியுள்ளது.

மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அமைப்புக்கள், அவர்களின் நீண்ட காலக் கோரிக்கையான உண்மை, நீதி மற்றும் இழப்பீடு ஆகியவற்றைக் கேட்க அரசு அவசரமாகவும் உண்மையாகவும் ஈடுபடவேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

இதேநேரம் சர்வதேச நாணய நிதியத்துடனான விதிமுறைகளும் நிபந்தனைகளும் வெளிப்படையானதாக இருக்கவேண்டும் மற்றும் பொது ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

(அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஆராய சிரேஷ்ட சட்டத்தரணிகள் குழு!

கொழும்பு, ஏப். 04

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை ஆராய்வதற்காக சிரேஷ்ட சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதில் ஏதேனும் சிக்கல் இருப்பதாக சம்பந்தப்பட்ட குழு சிபாரிசு செய்தால் அது உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படும் என அதன் தலைவர் சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு அமைய இந்த சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளும் பிரதான எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# "மலையக எம்.பியை காணவில்லை" ஏப். 1 இல் 119 இற்கு பறந்த அழைப்பு

கொழும்பு, ஏப். 04

மலையகத்தை சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினரொருவர், காணாமல்போய்விட்டாரெனக்கூறி, பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

அவசர பொலிஸ் பிரிவான 119 இற்கு அழைப்பை ஏற்படுத்தியே , முட்டாள்கள் தினமான ஏப்ரல் முதலாம் திகதி இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாம்.

அன்றைய தினம் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் கொழும்பில் இருந்துள்ளாராம்.

இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டவர் தொடர்பில் விசாரணை நடத்தியபோது, சம்பந்தப்பட்ட அரசியல்வாதிக்கு நெருக்கமானவரென தெரியவந்துள்ளதாம். (அ)

# அத்தியாவசிய ஏற்றுமதிக்கு தேவையான பணம் வேண்டும்

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 04

அத்தியாவசிய ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு தேவையான பணத்தை விடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.



அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் பிரகாரம் நாட்டின் நிதி ஒழுங்குமுறை தீர்மானங்களின் அடிப்படையில் அபிவிருத்திப் பணிகளுக்கு பணம் விடுவிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும் அமைச்சரவையுடன் கலந்தாலோசித்து வருவாய் ஈட்டும் பணிகளுக்குத் தேவையான பணத்தை விடுவிப்பதற்குத் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

நாட்டு மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் ஏற்றுமதியை உயர்த்தத் தேவையான பணத்தை விடுவிக்கவேண்டும் என்றும் நளின் பெர்னாண்டோ கூறினார்.

ஆகவே இந்த விடயம் தொடர்பாக அடுத்த வாரம் அமைச்சரவையில் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (அ)

# 37 சீனப் பிரஜைகளுக்கு விளக்கமறியல் உத்தரவு

கொழும்பு, ஏப். 04

விஸா இன்றி நாட்டில் தங்கியிருந்த 37 சீன பிரஜைகள் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 5 சீனப் பெண்களும் 6 வயது குழந்தையும் உள்ளடங்குவதாக பொலிஸார் கூறினர்.(அ)

## 13ஐ செயல்படுத்து...

ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமெனில் 13ஆவது திருத்தத்தை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அமுல்படுத்தும் விடயத்தில் இலங்கையை இந்தியா வெல்ல வேண்டும். இதுவே ஒரு நூற்றாண்டு கால இனப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண வழி வகுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். இந்த நிலையில், முன்னாள் இந்திய பிரதமர் இந்திரா காந்தி, 1984ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இலங்கை மீது படையெடுத்து இலங்கையின் முக்கிய மான விமானத்தளங்களைக் கைப்பற்றுவதற்கான இரகசியத் திட்டங்களை வைத்திருந்தார்.

எனினும், படையெடுப்பு உத்தி உள்ளிட்ட இரகசியத் திட்டம் கசிந்ததால் அதைச் செயல்படுத்த முடியவில்லை. இந்த நிலையில், இந்திரா காந்தியின் படுகொலை, இந்த படையெடுப்புத் திட்டத்தை மூடிமறைத்தது என்ற தகவலையும் புழல் காந்தி வெளிப்படுத்தியுள்ளார்.

இந்திரா காந்தியின் மறைவுக்கு பின்னர் அந்தப் பொறுப்பை ஏற்று ராஜீவ் காந்தி 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய உடன்படிக்கையின் கீழ் 13ஆவது அரசியலமைப்புக்கு வழிவகுத்தார் என்ற விடயத்தையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பிரச்னை பிரதானமாக பெரும்பான்மை சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையிலான மோதலாகும் என புழல் காந்தி கூறியுள்ளார்.

அத்துடன், அநுராதபுரத்தின் சைவத் தமிழ் மன்னன் தேவநம்பிய தீசனுடன் புத்த மதத்தைத் தழுவிய சைவத் தமிழர்கள், சிறுபான்மை சைவத் தமிழர்கள் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சியின்போது தமிழ்நாட்டில் இருந்து அழைத்து வரப்பட்ட தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான மோதலே, தற்போது நிலவுவதாக இந்திய சட்டத்தரணியும் செய்தியாளருமான புழல் காந்தி தமது கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## ஐக்கிய ...

சக்தியில் உள்ள பலரை ரணில் விக்கிரமசிங்கதான் அரசியலுக்கு கொண்டு வந்தார். அரசியலில் அவர்களுக்கு 'அ' கற்பித்த அரசியல் குரு அவராவார். எனவே, இணைந்து செயல்படுபதில் பிரச்னை கிடையாது. இணைந்து பயணித்தால்தான் நாட்டை மீட்டெடுக்க முடியும்.

எதிரணி உறுப்பினர்களை நாம் விலைக்கு வாங்க முற்படவில்லை. எதிர்க்கட்சி தலைவரிடம் தகவல் இருந்தால் அது தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிடம் முறையிடலாம்." -எனவும் நவீன் திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ)

## இராணுவ...

னைக்கு மேலதிகமாக 10,000 ரூபா அபராதமும் பிரதிவாதிக்கு விதிக்கப்பட்டுள்ளதுடன், அதனை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையை அனுபவிக்க நேரிடும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இராணுவ முகாமில் 2012 ஆம் ஆண்டு இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த கனிஷ்ட அதிகாரி தம்மை தாக்கியதாகவும் விடுமுறை தராமையால் கோபமடைந்து சண்டையிட்டபோது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் பிரதிவாதி சாட்சியமளித்துள்ளார்.

திடீர் சண்டை கோபாவேசமாக மாறி இடம்பெற்ற கொலைக்கு பிரதிவாதியை குற்றவாளியாக அறிவித்து 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

## கருநாட்டுக்...

சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் கீர்த்தி தென்னக்கோனின் வழிகாட்டலில், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினாலேயே இந்த சிங்களக் குடியேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் அவ்வாறு சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை பார்வையிடுவதற்கு, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், கரைதுறைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் நேற்று கருநாட்டுக்கேணிப் பகுதிக்கு சென்றனர்.

இந் நிலையில் குறித்த ஆக்கிரமிப்புச் செயற்பாட்டுக்கு முன்னாள் வடக்கு மாகாணசபை துரைராசா ரவிகரன் மற்றும், காணிகளுக்குரிய தமிழ் மக்கள் ஆகியோர் இணைந்து தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

கடந்த 1973, 1979ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் தமக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்ட இந்தக் காணிகளில் தாம் குடியிருந்ததுடன், பயிர்ச்செய்கைகளிலும் ஈடுபட்டு வந்ததாகவும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

தமது பூர்வீகமான இக்காணிகளில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு தாம் ஒருபோதும் இடமளிக்க முடியாதெனவும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நீர்ப்பாசன வயல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வெலிஓயா பகுதி சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், தமிழ் மக்களுக்குச் சொந்தமான மானாவாரி விவசாய நிலங்கள் பலவும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் தற்போது தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளையும் அபகரிப்புச் செய்து அங்கு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## வசந்தவுக்கு...

மானியங்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதற்கமைய, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 5 பேர் பொலிஸாரால் கொழும்பு வோட் பிரதேசம் பகுதியிலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அழைத்து செல்லப்பட்டு கலந்துரையாடலுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ருஹூணு, களனி, பௌத்த பாலி மற்றும் திறந்த பல்கலைக்கழகங்களில் இடம்பெறுவதாகக் கூறப்படும் மாணவர் அடக்குமுறையை தடுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குள் நுழைய முற்பட்ட நிலையில் அவர்கள் மீது நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து, அவர்கள் வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் அவர்களில் சிலர் கலந்துரையாடலுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அழைத்து செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி கட்சிகளிடையே எந்த வேறுபாடுகளும் இல்லை!

## ராஜித சேனாரத்ன எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 04

ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் கொள்கை ரீதியில் எவ்வித வேறுபாடுகளும் கிடையாது. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டங்களுடன் ஒருமித்த நிலைப்பாடே தம் மத்தியில் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியினர் ஐ.தே.க.வுடன் இணையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டங்களுக்கும், ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கும் வேறுபாடுகள் இல்லை என்ற நிலைப்பாடு ஐக்கிய மக்கள் சக்திக்குள் காணப்படுகிறது.

ஜனாதிபதியும் சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்ல வேண்டுமெனக் கூறினார். நாமும் அதனையே குறிப்பிட்டோம். ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிய போதும் இரு தரப்பினருக்கு மிடையில் கொள்கை ரீதியான முரண்பாடுகள் காணப்படவில்லை. சில செயல்பாடுகள் குறித்த முரண்பாடுகள் மாத்திரமே காணப்பட்டன.

அதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டங்கள் அனைத்தையும் எதிர்க்க முடியாது. அன்று ஜனாதிபதியை விமர்சித்த அனைவரும் இன்று பாராட்டுகின்றனர். எனவே, மக்களின் நிலைப்பாட்டுக்கமையவே நாம் செயல்பட வேண்டும். அதற்கமைய எவ்வாறு இணக்கப்பாட்டை எட்டுவது என்பது தொடர்பில் ஒருமித்து தீர்மானிக்க வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றதன் பின்னர் பொருளாதாரத்துடன் ஏனைய அரச துறைகளும் அபிவிருத்தியடைந்து வருகின்றன - என்றார். (ஐ)

# "பயங்கரவாத சட்டம் மூலம் உரிமை பறிப்பு"

அரசாங்கம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை முன்வைத்து, துன்பப்படும் மக்கள் தமது கோரிக்கைகளுக்காக குரல் எழுப்பும் போது, அவர்களை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி மனித உரிமைகளை நசுக்கி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பொரளையில் ஞாயிற்றுக்கிழமை நடந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் அதிக வரி மற்றும் அதிக மின் கட்டணத்தை அறவிடுவதன் மூலம் மக்களுக்கு சுமையை ஏற்படுத்தி முயற்சியாண்மையாளர்களைக்கூட நிர்க்கதிக்கு ஆளாக்குவதாகவும் கூறினார்.

## உண்மை...

தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டமூலம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் ஊழல் ஒழிப்பு சட்டமூலம் ஆகிய மூன்று வரைவுகளும் ஜூன் மாதத்திற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நிதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டம் தொடர்பில் பல்கலைக்கழகங்களின் பொருளாதாரப் பிரிவு விரிவுரையாளர்களை தெளிவுபடுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டம் தொடர்பில் அரசாங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கும் கருத்துக்களைப் பெறுவதற்கும் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் பொருளாதாரப் பிரிவின் சிறந்த மாணவர்கள் பத்து பேரை அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் அறிவித்தார்.

இதில், தெரிவு செய்யப்படும் சில மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நாட்டில் உற்பத்தி மற்றும் சேவைகள் தானியங்கி முறைமைக்கு செல்ல வேண்டும் எனவும் இல்லையெனில் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன் போட்டியிட முடியாது எனவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதற்காக கல்வி முறையை புதிதாக மாற்றியமைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், 18 ஆவது தடவையாக சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்வதற்கு தான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (அ)

## அமைச்சு...

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டியது கட்டாயமாகும் எனவும் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ)

## பல்கலைக்...

பாட்டம் நீர்த்தாரை பிரயோகம் செய்து கலைக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தில் காணப்படும் தமது பிரச்னைகளுக்கு தீர்வுகோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே குறிப்பிடுகையில்,

பல்கலைக்கழகங்களுக்குள் தற்போது அடக்குமுறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் போலியான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வித காரணமும் இன்றி களனி பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் சிலருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் எவ்வித அடிப்படை காரணமுமின்றி கால வரையறையின்றி மூடப்பட்டிருந்ததோடு, சுமார் 30 பேரின் மாணவர் உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும் இதுபோன்ற பல்வேறு செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பேராதனை மற்றும் ருஹூணு பல்கலைக்கழகங்களிலும் இவ்வாறான அடக்குமுறைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு தீர்வைக் கோரியே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தோம் -என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மக்களை அடக்குவது அரசின் நோக்கமல்ல!

## கூறுகிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஏப். 04

**புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு ஊடாக மக்களை அடக்குவது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.எனினும், கிளர்ச்சியாளர்கள் வெறியாட்டம் போட ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.**

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்குப் பல தரப்பிலிருந்தும் எதிர்ப்பு வெளியிடப்படுவது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு இம் மாதம் பாராளுமன்றத்தில் முன்வைக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சட்டவரைவு சபையில் முன்வைக்கப்படுவதற்கு முன்னரே அது பேராபத்து என்று எதிர்க்கட்சியினரும் அவர்களின் ஆதரவாளர்களும் துள்ளிக் குதிக்கின்றனர்.

முதலில் சட்டவரைவு முன்வைக்கப்பட்ட பின்னர் அதிலுள்ள பரிந்துரைகளைப் பார்க்கவேண்டும். அதன்பின்னர் விமர்சனங்களை முன்வைக்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது சர்வாதிகார அரசு அல்ல. பாராளுமன்றத்துக் குள்ளும் வெளியிலும் அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னர்தான் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்படும்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு மிக முக்கியமானது. அதைக் கேள்விக்குட்படுத்தும் வகையில் செயற்பட எவருக்கும் அனுமதி இல்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் திரைமறைவில்!

கொழும்பு, ஏப். 04

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் இழுத்தடிக்கப்பட்டு வரும் நிலையில், மறுபுறத்தில் ஜனாதிபதித் தேர்தலுக் கான ஏற்பாடுகளை அரசு திரைமறைவில் செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை களமிறக்குவது தொடர்பில் பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சு நடத்தியுள்ளன.

சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் உட்பட மொட்டு கட்சி அமைச்சர்கள் சிலர் இதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் எனவும், ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராக களமிறங்குவதே அவர்களின் திட்டம் எனவும் தெரியவருகின்றது.

தற்போதைய அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களில் பெரும்பாலானவர்கள் ரணிலை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் உள்ளனர் எனத் தெரியவருகின்றது. (அ)

# 14 வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மூவர் விடுதலை!

## வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

வவுனியா, ஏப். 04

14 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 தமிழ் அரசியல் கைதிகள் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் இருந்த திருவருள், சுலக்சன், தர்சன் ஆகிய மூவருக்கும் எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப் படாத நிலையில், மூவரையும் அனைத்து குற்றச்சாட்டுக் களில் இருந்தும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் விடுவித்து விடுதலை செய்தார்.

இது தொடர்பாக குறித்த மூன்று அரசியல் கைதிகள் தொடர்பில் மன்றில் ஆஜராகி வழக்கு விசாரணைகளை முன்னெடுத்த சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனித நாயகம் கருத்து தெரிவிக்கையில்-

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து விளக்கமறியலிலும், தடுப்பு காவலிலும் வைக்கப்பட்டிருந்த திருவருள் (வயது 45), சுலக்சன் (வயது 34), தர்சன் (வயது 33) ஆகியோர் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 14 வருடங்களாக இவர்கள் தடுப்பு காவலிலும், விளக்கமறியலிலும் இருந்த நிலையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசம் இளஞ்செழியனால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



அரசாங்கத்திற்கு எதிராக சதித் திட்டம் தீட்டிய குற்றம் இவர்களுக்கு எதிராக சாட்டப்பட்டிருந்தது. இவர்கள் ஏற்கனவே வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்மானித்தது. அதனைத் தொடர்ந்து சுயாதீன சாட்சிகள் இவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன. அந்த சாட்சியங்கள் இவர்களது குற்றத்தை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூப்பிக்கவில்லை. இதன் காரணமான அனைத்து குற்றங்களிலும் இருந்து இவர்கள் விடுவிக் கப்பட்டுள்ளனர்.

மிக நீண்ட காலம் இருந்த அரசியல் கைதிகளின் வழக்காக இது காணப்படுகின்றது-என்றார். (அ)

# நாணய நிதியத்துடன் அடுத்த வாரம் பேச்சு!

கொழும்பு, ஏப். 04

வாஷிங்டனில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரை யாட உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் இரு தரப்பு கலந்துரையாடல்களை அடுத்த வாரம் மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஆறு மாத கால மீளாய்வு தொடர்பிலும் நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சேமசிங்க கூறினார்.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் மாநாட்டில் இந்த கலந்துரையாடல் இடம்பெறும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் தம்முடன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் நிதியமைச்சின் செயலாளரும் கலந்துகொள்வார்கள் என அவர் குறிப்பிட்டார். (அ)

# யாழிற்கு கஞ்சா கடத்திய இருவர் அனலைதீவில் கைது!



யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ்ப்பாணம்-அனலைதீவு கடற்பரப்பில் நேற்று முன் தினம் இரவு 428 கிலோகிராம் எடையுள்ள கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

கடற்படையினரின் மேற்கொண்ட வழமையான கண்காணிப்பு நடவடிக்கையின்போது சந்தேகத்துக் கிடமான படகொன்று சுற்றிவளைக்கப்பட்டது.

அதிலிருந்து பதின்மூன்று பெரிய உறைகளில் சுற்றப் பட்டிருந்த 195 கஞ்சாப் பொதிகளுடன், இரண்டு சந் தேக நபர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

கேரள கஞ்சாப் பொதிகளுடன் சந்தேகநபர்கள் நேற்று அதிகாலை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

இவற்றின் மொத்தப் பெறுமதி 14 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் - அனலைதீவு பகுதியைச் சேர்ந்த 33 மற்றும் 37 வயது டையர்கள் என அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

இந்த நிலையில், சந்தேகநபர்கள் இருவரும், 428 கிலோகிராம் 900 கிராம் கஞ்சா மற்றும் படகுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# தலைமன்னார் கடலில் மிதந்து வந்த ஏழு கோடி ரூபா பெறுமதியான ஐஸ்!



மன்னார், ஏப். 04

தலைமன்னாரம், வெலிப்பாறையை அண்மித்த கடற்பரப்பில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது சுமார் 7 கோடி ரூபா பெறு மதியான 4 கிலோவுக்கும் அதிக மான ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்ட தாக கடற்படையினர் தெரிவித்தனர்.

வடமத்திய கடற்படைக்குச் சொந்தமான இலங்கை கடற்படை கப்பலான தமன்னா, தலை மன்னார், வெலிப்பாறை கடற்பகுதியில் மேற் கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது கடலில் மிதந்த பையை அவதானித்து ஆய்வு செய்த தில் 4 கிலோ 500 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஐஸ் போதைப்பொருள் நான்கு பார்சல்களில் பொதி செய்யப்பட்டிருந்தது. இந்த ஐஸ் போதைப் பொருளின் மொத்த பெறுமதி 67.5 மில்லியன் ரூபா வாகும் என நம்பப்படுகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.